நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI  புதியபூமி


சுற்று 06   மார்ச் 1999   பக்கம் 8   விலை ரூபா 10/=   சுழற்சி 27


☆ யுத்தத்தை எதிர்த்து தனியார் மயத்தை தடுத்து நிறுத்த

☆ மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க

☆ வெகுஜன அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க

**புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்!**



# உங்கள் வாக்கு யாருக்கு?

உங்களுடைய வாக்குரிமையை பயன்படுத்தி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு வரவேண்டிய உரிமை உங்களுடையதே. இதில் யாரும் எவ்வகையிலும் தலையிட முடியாது. ஆளும் பொதுசன முன்னணி, முன்பு ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல கட்சிகள் உங்கள் முன் வந்துள்ளன. தனியே ஆட்சி செய்ய முடியாது விடினும் ஆட்சியில் பங்கேற்று ஆட்சிகள் செய்த மக்கள் விரோத செயற்பாடுகளுக்கெல்லாம் துணை போனவர்களும், இன்றும் ஆதரவு கொடுத்து நிற்பவர்களும் தமது கறைபடிந்த கரங்களை மறைத்துக் கொண்டு வெட்க ரோசம் இன்றி வாக்கு கேட்டு நிற்கிறார்கள். மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, இன உரிமை விரோத சக்திகளாகச் செயற்பட்டுக் கொண்ட இவர்கள் வெவ்வேறு முகமூடி அணிந்து தேர்தல் காலத்தில் மட்டும் குனிந்து, கால் கூசி குளைந்து, வளைந்து மக்கள் சேவகர்களாக நடித்து வரும் காட்சிகள் வேடிக்கையாக இருக்கின்றன. எனவே மக்கள் இத் தேர்தல் சந்தர்ப்பத்தில் மக்களின் முன்னால் ஓர் பொறுப்பான கடமை முன்னெழுந்துள்ளது. தேர்தலில் நிற்கும் ஒவ்வொரு கட்சிகள் பற்றியும் இதன் தலைவர்கள் பற்றியும் அவர்களது கடந்தகால நிகழ்கால நடைமுறைகள் பற்றியும் ஆராய்ந்து தெளிவு பெற்றுக்கொள்வதே அதிமுக்கியமான கடமையாகும், யார்? ஏன்? எப்படி? எதற்காக? என்னும் கேள்விகளின் மூலம் பெறப்படும் உண்மைகளை வைத்து உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதே நீதியான நியாயமான செயலாகும்.

இந் நேரத்தில் இம் மாகாண சபைத் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி புதிய தோர் அரசியல் சக்தியாக உங்கள் முன் வந்து நிற்கிறது. ஆறு அரசியல் கட்சிகள் அமைப்புகள் இணைந்து ஒரு நாடு தழுவிய பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப் பட்டதே புதிய இடதுசாரி முன்னணியாகும். நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்களின் விமோசனத்திற்கு சமூக மாற்றமே அடிப்படையானது என்பதை ஏற்றுக் கொண்ட மாக்சிச நிலைப்பாடுடைய கட்சிகளின் ஐக்கிய நிலைப்பாடே புதிய இடதுசாரி முன்னணியாகும். அதில் புதிய ஜனநாயகக் கட்சியும் இணைந்துள்ளமை குறிப்பிடக் கூடியதாகும்.

மேலும் இவ் இடதுசாரி முன்னணி உடனடிக் கோரிக்கைகளைக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தை வரைந்து கடந்த எட்டு மாதங்களாக வேகத்துடன் செயற்பட்டு வருகின்றது. நாட்டை நாசப்படுத்தி வரும் யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு காணப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறது. நாட்டின் பொருளாதாரத்தை அழித்து வரும் தனியார் மயத்தை தடுத்து நிறுத்துமாறு கோரிவருகிறது. மக்களின் ஜனநாயக-மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு கேட்டு வருகிறது. குறிப்பாக தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் இன உரிமைகளை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வென்றெடுத்து நிலை நாட்டி சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதை வற்புறுத்தி நிற்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் யுத்தத்திற்கு எதிரான பேச்சுவார்த்தை மூலமான நியாயத் தீர்வுக்கு ஆதரவாக பேரினவாதிகளின் கடுமையான எதிர்ப்புகள் மத்தியிலும் துணிவான இயக்கத்தை முன்னெடுத்து வருவது புதிய இடதுசாரி முன்னணியேயாகும். இது தேர்தலுக்கான ஒரு தோற்றம் காட்டும் வேலை முறையல்ல.

8ம் பக்கம் பார்க்க..

# இந்திய வம்சாவளிப் பேரணி மலையக மக்களை ஏமாற்ற முடியாது!

மலையகத்தில் தானே ஒப்பற்ற தலைவன் என மார்தட்டி வந்தவர் தொண்டமான். ஏனைய தொழிற்சங்கங்களை எல்லாம் குட்டிச் சங்கங்கள் என ஏளனமிட்டு அவற்றை நிராகரித்து வந்த தொண்டமான் யூ.என்.பி.யின். பதினேரு வருடகால இருண்ட ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். அதுமட்டுமின்றி அந்தக் கட்சியின் யானைச் சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிட்டு மலையக மக்கள் மத்தியில் யூ.என்.பிக்கு ஆதரவும் செல்வாக்கும் தேடிக் கொடுத்தவர். ஐக்கிய தேசியக் கட்சி மலையக தொழிலாளர்கள் மத்தியில் தொழிற் சங்கத்தை கட்டி எழுப்புவதற்கும் வழி வகுத்துக் கொடுத்தவர் தொண்டமான். பதினேழு வருட கால ஆட்சியில் இ.தொ.காவும், யூ.என்.பி. தொழிற்சங்கமும் மட்டுமே சகல முடிவுகளையும் எடுத்து செயல்படும் நிலையை அன்று நடைமுறைப்படுத்தியவரும் தொண்டமானும் இ.தொ.கா. வுமேயாகும். ஆனால் இன்று தொண்டமான் யூ.என்.பியை திட்டுகிறார். அத்துடன் மலையக மக்களைப் பார்த்து சோத்துப் பார்சலுக்கும் பீடித்துண்டுக்கும் யூ.என்.பியின் பின்னால் செல்வதாகச் சீறிப் பாய்கிறார்கள் இ.தொ.கா.வினர்.

அன்று யானையில் இருந்த போது யூ.என்.பியின் உண்மையான தன்மை பற்றி எதுவும் பேசாத தொண்டமான் இன்று அதிலிருந்து பாய்ந்து பொது சன முன்னணிக் கதிரையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஏதோ புலம்புகிறார். ஒரு காலத்தில் மலையகத்தின் ராசாவாகப் பவனி வந்து படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யக் கூடியவர் தான் மட்டுமே என்ற தலைக் கனத்துடன் திமிர்த்தனமாகப் பேசி வந்த தொண்டமான் இன்று தன்னையும் - இ.தொ.கா வையும் மலையக மக்கள் நிராகரித்து வருகிறமை பற்றி ஒப்பாரி வைக்கிறார்.

இ.தொ.கா. விற்குள் கூட உடைவும் ஒற்றுமையீனமும். அதன் காரணத்தினாலேயே தனது சேவல் சின்னத்தைக் கூட இழந்து இன்று மயில் மேல் ஏறி உலா வருகிறார்கள். அன்றைய சேவலும் இன்றைய மயிலும் அடிப்படையில் மலையக மக்களுக்குப் பாதை காட்டக் கூடிய சின்னங்கள் அல்ல என்பது வெளிப்படையானது. ஏனெனில் இன்று யார்யாரைக் குட்டிச் சங்கங்கள் என்று ஏசி நிராகரித்தாரோ அவர்களை தனது சகாக்களாக அழைத்து இழந்து போன பலத்தைப் பெற இந்திய வம்சாவழிப் பேரணி அமைந்து உலா வருகிறார்கள். தனித் தனியாக இருந்து ஏமாற்ற முடியாது என்ற உண்மையை உணர்ந்ததால் இணைந்து நின்று புதிய பெயர்சூடி தேர்தலில் நிற்கிறார்கள்.

இந்த இந்திய வம்சாவழிப் பேரணி என்பது பல்வேறு நிறங்களில் புளித்துப் புரையோடிப் போன பானங்களை எல்லாம் ஒன்று சேர்த்து புதிய போத்தலில் வார்த்து பம்மாத்துக் காட்டுவதேயாகும். இவர்கள் உண்மையில் மலையக மக்களுக்கு புதிய தலைமை கொடுப்பது உண்மையானால் இப் பேரணி அமைந்த பின் ஏதாவது ஒரு உருப்படியான வேலையாவது மலையக மக்களுக்கு செய்திருத்தல் வேண்டும்


(8ம் பக்கம் பார்க்க..)

## தோழர் தம்பையா மீதான தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது

புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளரும் நுவரேலியா மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான தோழர் இ.தம்பையா மீது ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்களால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. ராகலை நடுக்கணக்குத் தோட்டத்தில் கடந்த 11-03-1999ல் இரவு 12.30 மணியளவில் இத் தாக்குதல் முயற்சி நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தலைமையில் வந்த கும்பல் தோழர் தம்பையா தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்டு தாக்க முற்பட்டது. ஏற்கனவே முன்னெச்சரிக்கையுடன் இருந்த புதிய ஜனநாயகக் கட்சித் தொண்டர்கள் இம் முயற்சியை முறியடித்துக் கொண்டனர். இச் சம்பவத்தில் திருமதி கந்தையா பூமாலை என்ற புதிய இடதுசாரி முன்னணியின் மற்றொரு வேட்பாளரான தோழர் நவநீதராஜாவின் தாயார் தலையில் காயமடைந்து உடப்புசலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இச் சம்பவத்ம் யூ.என்.பியின் போலி வேடத்தை அம்பலமாக்கியுள்ளதையே காட்டுகின்றது.

**புதிய இடதுசாரி முன்னணி**

### நுவரேலியா மாவட்ட முதன்மை வேட்பாளர்



தோழர் இ.தம்பையா

3

### கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளர்



தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன

35

### கொழும்பு மாவட்ட பிரதான வேட்பாளர்



தோழர் எஸ்.தேவராஜா

46

### கொழும்பு மாவட்ட வேட்பாளர்



திருமதி. எஸ்.ரி.கலாலஷ்மி

21

### கொழும்பு மாவட்ட வேட்பாளர்



தோழர் சிறிதுங்க ஜயசூரிய

43

நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய வம்சாவழிப் பேரணியும் பேரினவாத எதிர்ப்புக் கோஷமும்

பேரினவாதத்திற்கும் பேரினவாதக் கட்சிகளுக்கும் எதிராக ஆக்கிரோசமான அறிக்கைகளையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டு கொழும்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக வந்து நிற்பவர் மனோ கணேசன் என்பவர். இவர் மறைந்த தொழிற்சங்கவாதியும் நடிகரும் வர்த்தகருமான விபி. கணேசனின் மகன் ஆவார். பாராளுமன்ற அரசியலில் எந்தெந்த உத்தி முறைகளைக் கையாண்டால் குறுக்கு வழியில் விரைவாக உச்ச இடத்திற்கு வந்து கொள்ளலாம் என்பதை உணர்ந்து அவசர அவசரமாகச் செயல்படுபவர். அவரது வயது, தோற்றம், சாதி, பணம், மேல் மட்டத் தொடர்புகள் யாவற்றையும் உணர்ந்து ஏற்றுக் கொண்டதாலேயே இந்திய வம்சாவளிப் பேரவையினர் அவரை கொழும்பு மாவட்டத்திற்கு முதன்மை வேட்பாளராக அங்கீகாரம் வழங்கி மாகாணசபைத் தேர்தலில் நிறுத்திக்கொண்டனர்.

அவரும் அதற்குத் தகுந்தாற்போல் அறிக்கைகள், பேச்சுக்கள் மட்டுமின்றி பத்திரிகைகளை செல்வாக்குப் படுத்தி நீண்ட கட்டுரைகளைக் கூட வெளியிட்டுள்ளார். அவற்றின் சாராம்சம் பேரினவாதத்திற்கும் பேரினவாதக் கட்சிகளுக்கும் சாட்டை அடி கொடுப்பது போலவும் தானே பேரினவாதத்திற்கு எதிரான இளம் தலைமுறை மினரின் தளபதி போலவும் தோற்றம் காட்டிக் கொள்ளப்பட்டுள்ளது. வசதி வாய்ப்பு பல படைத்த இந்த இளைஞருக்கு பேரினவாதத்தைப் பற்றிய அடக்க முடியாத கோபம் எப்பொழுது ஏற்பட்டது என்பதே ஆச்சரியமாக இருக்கிறது. சரி பேரினவாதத்திற்கு எதிராகக் கோபப் படுவதற்கு இன்று ஏராளம் சந்தர்ப்பங்கள் உண்டு என்பது மறுப்பதற்கில்லை. அந்த கோபம் நியாயமானதாக இருப்பின் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் பீறிட்டிருப்பது தான் பலருக்கு சந்தேகத்தைக் கொடுத்துள்ளது. அதற்கும் மேலால் இந்திய வம்சாவழிப் பேரணியின் மூலமாகப் பேரினவாதத்திற்கு எதிராகப் பேராடப் புறப்பட்டுள்ள மனோ கணேசனின் நிலைப்பாடு தான் சிரிப்புக்கு இடமளிக்கிறது. இந்திய வம்சாவழிப் பேரணியின் தலைமைப் பாத்திரம் வகிக்கும் அமைச்சர் தொண்டமான் பேரினவாதக் கட்சிகளின் அரசாங்கத்தில் அன்றும் அமைச்சர் இன்றும் அமைச்சர் நாளையும் அவ்வாறேதான் அவர் இருப்பார். அதை யாரும் அசைக்க முடியாது. அவரது இ.தொ.காவின் பா.உ.க்கள் எனப்பட்டவர்கள் இன்றும் மாத மாதம் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தை நடாத்த அவசரகாலச் சட்டத்திற்கு தமது திருக் கரங்களை உயர்த்தி ஆதரவு தெரிவித்து வருகிறார்கள். சரி அதனைத் தான் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு எதிரான யுத்தம் எனக் கொண்டு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் 250 மலையக இளைஞர்களை விசாரணை இன்றி சிறைகளில் வைத்திருக்கிறார்களே. அதுபற்றியாவது ஏதாவது நடவடிக்கை எடுத்து உள்ளார்களா? சரி தொண்டமானை விட்டு இ.வ.வ போரவையின் ஏனையவர்களை எடுத்துப் பார்த்தால் அவர்களும் பேரினவாதக் கட்சிகளின் அரசாங்கத்திற்கு வால் பிடிப்பவர்களாச்சே. ஒ.ஏ.இராமையா யார் என்ன செய்கிறார். அவர் முன்பு முழங்கியவை என்ன? இன்று பேசுவது யாது? டி.அப்யாத்துரை என்ன சொல்கிறார். அரசாங்கத்தில் உள்ள ஒரு சிலரைத் தவிர அனைவருமே வயம்ப தேர்தலை ஒரு மோசடிமிக்க ஜனநாயக விரோதத் தேர்தல் என்றனர். ஆனால் அப்யாத்துரை மட்டும் ஜனநாயகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி என அறிக்கை விட்டு அரசாங்கத்தை வரவேற்றுக் கொண்டார்.

மேலும் இரத்தினபுரி வேவல வத்தையில் நானூறு லயன்கள் எரிக்கப்பட்டபோதும் பசறைத் தொழிலாளர் போராட்டத்தின் போதும் பேரினவாதிகளும் அரசாங்கமும் நடந்து கொண்ட மலையக மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு இ.வ.வ. பேரவையும் அதன் தலைவர்களும் என்ன பரிகாரம் கண்டார்கள், அங்கே புறமுதுகைக் காட்டியவர்கள் இப்போது தேர்தலில் மட்டும் பேரினவாதம் பற்றி முழக்கமிடுவது ஏன்? இவையாவும் சில வேளை அரசியலில் முதிரா இளைஞரான மனோ கணேசனுக்கு தெரியாது போய் விட்டதா? அல்லது தெரிந்தும் அரசியல் ஏமாற்றுத் தனத்தைப் பயின்று கொள்ள முற்பட்டுள்ளாரா? மனோ கணேசன் போன்றோர் நேர்மையாகவும் மலையக மக்களுக்கு அல்ல கொழும்புவாழ் மலையக மக்களுக்கு சேவை செய்ய விரும்பினால் புதிய பாதைகளும் புதிய தலைமைத் துவத் தளங்களும் உண்டு. அங்கே பட்டம் பதவி பணச்சேர்ப்பு எமாற்று மோசடிகளுக்கு இடம் இருக்க முடியாது. அர்ப்பணிப்பும் தியாகமும் மலையக மக்களின் விடிவுக்கான குறிக்கோளுமே அங்கு உண்டு. அத்தகைய இடங்களை எட்டிக் கூடப்பார்க்க இயலாதவர்கள் சும்மா மக்களை ஏமாற்றி திசை திருப்ப வெறும் பேரினவாத முக்கங்களை சுவர்களில் ஒட்டியும் பத்திரிகைகளில் அழகுற எழுதியும் வருவது நீண்ட காலத்திற்கு எடுபடாத ஒன்றாகும்.

# மலையகத்தில் அடுத்த தொண்டமானாகும் ஆசை?

தொண்டமானுக்குப் பிறகு அவ்விடத்துக்கு வரக்கூடிய தகுதி ஓ.ஏ.இராமையாவுக்கு மட்டுமே இருப்பதாக அவரின் தொழிற்சங்கத்தின் தோட்டக்கமிட்டித் தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ஓ.ஏ இராமையாவும் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் அப்படி குறிப்பிட்டுள்ளார்.

தொண்டமானை ஒரு முதலாளி என்றும் தொழிலாளர் வர்க்கத் துரோகி என்றும் கூறியவர்கள் இன்று தொண்டமானாவதை பற்றி கனவு காண்கிறார்கள் தொண்டமானுடன் ஒரே மேசையிலிருந்து பேசுவதைக்கூட பெரும் தகுதியாக நினைக்கின்றனர். தொண்டமானது தலைமைத் துவத்தைப் புகழ்கிறார்கள்.

தொண்டமானுடன் ஐக்கியப்பட்டு வேலைகளை முன்னெடுப்பதற்கு ஏற்றவாறு தொண்டமானின் வர்க்க நிலைப்பாடு எந்த அளவிலும் மாறுபடவில்லை. பொதுத் தேவையும் எழவில்லை. ஆனால் இடதுசாரிகள் என்று சொல்லப்பட்ட இராமையா போன்றவர்களின் வர்க்க நிலைப்பாடு மாற்றமடைந்திருக்கிறது. (ஏற்கனவே தொழிலாளர் வர்க்க நிலைப்பாடு இருந்திருந்தால் இப்போது முதலாளி வர்க்க நிலைப்பாடாக மாறியிருக்கிறது எனலாம். இல்லாவிட்டால் சிவப்பு சாயம் வெளுத்துவிட்டது எனலாம்.)

கம்யூனிஸம் பேசிக்கொண்டிருந்து விட்டு வர்க்கப்புரட்சிப் பற்றி பேசிவிட்டு இந்தியவம்சாவழி மக்கள் பேரணியுடன் சேர்ந்தது மட்டுமின்றி தொண்டமானை விட மிகவும் பிற்போக்கான நிலைப்பாட்டை இராமையா போன்றவர்கள் எடுக்கின்றனர்.

நுவரெலியா மாவட்ட எம்.பி ஆறுமுகம் தொண்டமானும் அவரின் கையாட்களும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை ஊழியரை தாக்கியதாக மத்திய மாகாண வைத்தியர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் ஆறுமுகம் தொண்டமானின் கையாட்கள் கைது செய்யப்பட்டனர். அவர் சரணடைந்தார். அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். இக்காடைத்தனத்திற்கு மாலை போட்டு வரவேற்றவர்களில் ஓ.ஏ.இராமையா வும் ஒருவராவார்.

மலையகத்தில் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் புதிய ஜனநாயக கட்சி ஆதரவாளர்களிடம் போயும் போய் யாழ்ப்பாணத்தவர்களும் அங்கம் பெறும் புதிய ஜனநாயக கட்சிக்கா ஆதரவு கொடுக்கிறீர்கள் என வாய் கூசாது கூறி இருக்கிறார் இந்த ''மாக்சிசவாதி'' யான இராமையா. அதிலும் வேடிக்கை இந்த 'மாக்சிச மனிதர்' ஆட்சியில் பங்கு கொள்ளும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராவார். இவரது உண்மையான நிறத்தை மலையக மக்கள் ஏற்கனவே தெளிவாகத் தெரிந்துள்ளார்கள்.

# நானும் எனது பெறுமதியும்

## தொண்டமான் கூற்றும் — ஒரு கதையும்

''எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இந்திய வம்சாவழி மக்கள் பேரணிக்கு மலையக மக்கள் அளிக்கும் வாக்குகள் எமது சமூதாயம் இந்த நாட்டில் தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ வழி வகுக்கும்.'' இவ்வாறு அமைச்சர் தொண்டமான் இரத்தினபுரி காவத்தையில் தோட்டத் தலைவர்கள் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

தொண்டமான் மேலும் தனது உரையில் ''நான் இல்லாத காலத்திலேயே எனது பெறுமதியை நீங்கள் உணர்வீர்கள்'' என்றும் கூறிவைத்துள்ளார். இதனை பத்திரிகையில் வாசித்த போது ஒரு சிங்கள கிராமியக் கதை தான் நினைவுக்கு வந்து கொண்டது. ஒரு கிராமத்தில் அறிவாளி எனப்பட்ட ஒருவர் இருந்தார். அக் கிராமத்தில் எழும் பிரச்சினைகள யாவற்றுக்கும் அவரே நேரில் வந்து ஆலோசனை அறிவுரை கூறிச் செல்வார். கிராம மக்களும் அவரை அறிவாளி என நம்பி அவரது அறிவுரையைக் கேட்டு வந்தார்கள். அவரது அறிவுரைகளில் மக்களுக்கு காலப் போக்கில் அதிருப்தி ஏற்பட்டபோதிலும் வேறு வழி இன்றி அவரிடமே அறிவுரை கேட்கும் நிலை இருந்தது. ஒரு நாள் ஒரு கிராமத்தவர் வீட்டில் ஆடு ஒன்று பானைக்குள் தலையை விட்டு வெளியே எடுக்கமாட்டாது அவதிப் பட்டுக் கொண்டிருந்தது. வீடுக்காரர் அந்த கிராமத்து அறிவாளியிடம் சென்று விபரத்தைக் கூறினார். அவர் தான் நேரில் வந்து பார்த்து அறிவுரை கூறுவதாக கூறினார். அவர் யானை மீது தான் அறிவுரை கூற வருவது வழக்கம். அவ்வாறே யானை மீது ஏறி அக் கிராமத்தின் வழியாக அச் சிறு வீட்டை அடைந்தார். யானையில் இருந்து இறங்காது ஆடு நிற்கும் இடத்திற்கு சென்றதால் வீட்டின் ஒரு பகுதி இடிந்து கொண்டது. பின்பு ஆட்டை அவதானித்து ஆலோசித்தார். இறுதியில் அறிவுரை வழங்கினார். முதலில் ஆட்டின் தலையை வெட்டச் சொன்னார். அதன்படியே தலை வெட்டப் பட்டது. அப்போது ஆட்டின் தலை பானைக்குள்ளேயே இருந்தது. பானையை உடைத்து தலையை எடுக்கும்படியும் அறிவுரை கூறினார். அவ்வாறே செய்யப் பட்டது. தனது அறிவுரையின் பெருமையுடன் அவ் அறிவாளி யானையில் இருந்தபடியே தனது வீட்டுக்குத் திரும்பினார். அப்போது மக்கள் கூட்டமாகக் கூடி நின்றனர். அவர்களைப் பார்த்து அவ் அறிவாளி கூறினார் 'நான் இல்லாத காலத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களோ தெரியாது அப்போது தான் எனது பெறுமதி உங்களுக்குத் தெரியவரும். என்றார்.

மேற்கூறிய கதைக்கும் தொண்டமான் கூறியுள்ள கூற்றுக்கும் உள்ள ஒற்றுமை தான் என்னே! ஆனால் ஒரு விடயம் மட்டும் இக்கதையில் இருந்து வேறுபட்டு உள்ளது. அன்று அக்கிராம மக்கள் அந்த அறிவாளியின் அறிவுரையைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் இன்று மலையக மக்கள் அமைச்சர் தொண்டமானின் அறிவுரையைக் கேட்கத் தாயாரில்லாத நிலையில் உள்ளனர்.

## நாலு நடக்கும் உலகிலே

### தீர்க்கதரிசி

ஈழத் தமிழ்த் தேசியவாத அரசியலில் என்னத்துக்குக் குறைவில்லாமல் போனாலும் தீர்க்கதரிசிகளுக்கு குறைவு இல்லை. 'அப்பவே சொன்னேன்' என்று சொல்ல எப்பவுமே ஆள் உண்டு. இப்போ குமார் பொன்னம்பலத்தின் முறை. அப்பவே சொன்னாராம் சந்திரிகாவுக்குப் போட வேண்டாம் என்று. தமிழர்கள் கேட்கவில்லையாம். அதனால் படாத பாடு படுகிறார்களாம். தமிழர்களைப் பொறுத்த வரையும் சந்திரிகா வந்து ஒன்றையும் திருத்தவில்லை என்பது உண்மை ஆனால் அப்ப இருந்த யூ.என்.பியே இப்பவும் இருக்குமானால் இன்னமும் என்ன நடந்திருக்கும் என்று நம்ம தீர்க்கதரிசிக்குத் தெரியாதா? தெரிந்தே தான் பேசுகிறாரா?

யார் பதவியில் இருந்தாலும் நாட்டை ஆளுகிறது யார் என்பது ஜனங்களுக்கு வெளிச்சமாகி வருகிறது. தீர்க்கதரிசிகளுக்கு?

### குற்றமில்லை?

தமிழ்த் தேசியவாதம் ஸ்ரீ.ல.சு.கட்சியையே சிங்களப் பேரினவாதத்தின் கட்சியாகக் கண்டு வந்துள்ளது. 'சரிநிகர்' இருவாரப் பத்திரிகையில் 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம் தொடர்பான கட்டுரை ஒன்று ஜனவரி மாதம் வந்திருந்தது. அதில் அந்தச் சம்பவத்திற்கான முழுப் பழியையும் ஸ்ரீ.ல.சு.கட்சி மீதும் பொலிசார்மீதும் யாழ் மேயர் துரையப்பா மீதும் சுமத்தியிருந்ததோடு. ஸ்ரீ.ல.சு.கட்சி அப்பவும் இப்பவும் ஒரே மாதிரித் தான் என்ற விதமாக தலைப்பும் போட்டு எழுதியிருந்தது. இது சரியா பிழையா என்று விடியும் வரை விசாரித்தாலும் வழக்குத் தீராது.

அதே இதழில், மு.பொ என்கிறவர், (மு.த. என்கிறவர் கொஞ்சம் சொந்தம் போல) எப்படிப்பட்ட தீர்க்கதரிசி என்று ஒரு பக்க நீளத்துக்கு விளாசித் தள்ளி இருந்தார். மறந்தாற் போல், 1970வாக்கில் ஸ்ரீ.ல.சு.கட்சி யோடு சேர்ந்து நின்ற புராணத்தையும் எழுதி விட்டார். 1970ல் ஸ்ரீ.ல.சு.க இனவாதக்கட்சி என்று தமிழ்த் தீர்க்கதரிசிமார் எல்லாரும் முடிவு கட்டின பின்னாலும் அந்த மு.தவுக்கு விளங்கக் கொஞ்சக் காலம் எடுத்ததா? இல்லாவிட்டால் அவரும் அப்போது அந்த அகராதியிலே ஒரு தமிழ்த் துரோகியா?

### சைவமும் சினிமாவும் தழைத்தினிதோங்குது

சைவமங்கையர் கழக நிதிக்காக தமிழ்நாட்டிலிருந்து குஷ்பு என்கிற சினிமா நடிகை வரவழைக்கப் பட்டுள்ளார். அவர் தமிழ் சினிமா படத்தின் அலங்கோல நெளிப்புக் களைத் தன் குழுவினரோடு ஆடிக் காட்டியுள்ளார். அனுமதிக்கு ஆயிரம் ரூபா வரை அள்ளிக் கொடுக்கக் கலையுணர்வு மிக்க வள்லல்கள் உள்ள நாட்டில் இன்னும் என்னென்னவெல்லாம் காணக் கிடைக்குமோ.

தமிழ்ப் பண்பாடு, பரதம், கர்நாடக இசை என்று பழமைவாதப் பம்மாத்துப் பண்ணும் சைவமும் தமிழும் நிறுவனத்தின் சுயரூபத்தைத் தோலுரித்துக் காட்டிய இந்த சினி கூத்து.

அது ஒருபுறமிருக்க சைவப் பெருங்குடி மங்கையர் நடுவே ஒரு சிறு முரண்பாடு. குஷ்பு ஒரு முஸ்லிம் பெண்ணாம். அவரைக் கொண்டு இந்துப் பெண்களுக்காக நிதி திரட்டுவதா என்று சில எதிர்ப்புக் குரல்கள். இந்துச் சினிமாக்காரர்கள் வந்து ஆபாசமாக நெளித்திருந்தால் அது யோக்கியமாகி விடுமா என்று தான் தெரியவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI புதியபூமி

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள்

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் பலவேறு வகைகளில் தொடரப்படுகின்றன. பொருளாதார அரசியல் சமூக கலாச்சாரத் தளங்கள் அனைத்திலும் பெண்கள் இரண்டாம் தர நிலையில் நடாத்தப்படும் நிலை பரவலாகக் காணப்படுகின்றன. பெண் என்ற காரணத்திற்காக ஆண்களிடத்திலிருந்து வேறு படுத்தப்பட்டு பாகுபாட்டுடன் நடாத்தப்படுவதும், மனிதர்களில் பெண்கள் என்போர் சம பாதியும் சமத்துவ உரிமையும் உடையவர்கள் என்பது மறுக்கப்படுவதும் பெரும்பாலான சமூகங்களிலே காணமுடிகின்ற நிதர்சனமாகும்.

நமது நாட்டில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை வகைப்படுத்தினால் பொருளாதாரச் சுரண்டலே முதன்மை இடத்தை வகிக்கின்றது. மலையகத்தில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் லட்சக் கணக்கான பெண்கள் குறைந்த சம்பளம், கடுமையான வேலை, நிறைந்த போசாக்கின்மை, சுகாதார வளர்ச்சி இன்மை போன்றவற்றில் கடும் பாதிப்புக்களைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களது முதல் எதிரி மூலதனமிட்டு உழைப்பைச் சுரண்டும் கம்பனிகளாகவும் தனியார் அரசாங்க துறையினருமாகவே காணப்படுகிறது. நகரங்களில் காணப்படும் தொழிற்சாலைகளில் அவை பல்தேசியக் கம்பனிகளாகவும் தனியார் தொழிற்சாலைகளாக இருப்பினும் அவற்றில் தொழில்புரியும் பெண்களின் உழைப்பு சுரண்டி வடித்தெடுக்கப்படுகிறது. கிராமங்களில் இருந்து சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசங்களில் வந்து தங்கி இருந்து வேலை செய்யும் இளம் பெண்கள் மீது உழைப்புச் சுரண்டல் மட்டுமன்றி பாலியல் ரீதியான சுரண்டல்களும் இடம் பெறுகின்றன.

மேலும் நாடு பூராவும் விவசாயத் தொழில்களில் ஈடுபடுபவர்களாகப் பெண்களே இருந்து வருகின்றனர். தினக் கூலிகளான பெண்களின் வேதனம் ஆண்களுக்கு வழங்கப்படுவதின் மூன்றில் ஒன்றுக்கும் குறைவானதாகவே காணப்படுகின்றது. தனியார் துறையில் தொழிலாளர்களாக மட்டுமின்றி ஊழியர்களாக உத்தியோகத்தர்களாக உள்ள பெண்கள் கூட பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஏனைய பாகுபாடுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியே உள்ளது.

இன்றைய சமூக அமைப்பில் பெண்கள் வீட்டில், வெளியில், தொழில் புரியும் இடங்களில், பொது இடங்களில், உழைப்புச் சுரண்டல் மட்டுமன்றி பெண்கள் என்ற காரணத்தால் பாலிய ரீதியான பன்முக வன்முறைகளுக்கும் நாளாந்தம் முகம் கொடுத்தேதீர வேண்டியுள்ளது. ஒரு பெண் பிறந்து வளர்கின்ற ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் இறுதியாக மூப்படைகின்ற காலம் வரை ஒவ்வொரு வகை ஒடுக்குமுறை விலங்கு பூட்டப்படும் நிலை சமூக அங்கீகாரமாகி நிற்பதைக் காணலாம்.

இன்று உலகம் பூராவும் பெண் விடுதலைக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன என்பது காணக் கூடியதே. ஆனால் அவ் ஒலிகள் யாவும் வெவ்வேறு நிலைகளில் இருந்தே ஒலிக்கப்படுகின்றன. வரலாற்று ரீதயில் பெண் ஒடுக்குமுறையின் ஊற்று மூலத்தை கண்டறிந்து அதன் வளர்ச்சியை தெளிவுபடுத்தி சுட்டிக்காட்டியது மார்க்சியமேயாகும். பெண்கள் சகலவகை ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபடுவதற்கு குறிப்பாக இன்றைய முதலாளித்துவ அமைப்பு முறையை உடைத்தெறிந்து சோஷலிசத்தையும் அதன் ஊடாக கம்யூனிசத்தையும் சென்றடைவதற்கான போராட்ட மார்க்கத்தை மாக்சியம் முன்வைத்து நடைமுறையாக்கி வருகின்றது.

இத்தகைய நடைமுறைச் சாத்தியமான சமூக மாற்றப் பாதையில் இருந்து பெண்களைத் திசை திருப்புவதற்கான ஒரு உத்தியாக நவீன் பெண்ணியக் கோட்பாடுகளை முதலாளித்துவம் முன் தள்ளி அவற்றைப் பெரும் பிரசாரங்களாக்கி வருகின்றது. ஆணாதிக்கம் என்னும் ஒன்றைப் பரிமாண அளவு கோல் கொண்டு சகலவகைப் பெண் ஒடுக்குமுறைகளையும் பார்க்கும் ஒரு வகையான வக்கிரப் போக்கு வளர்க்கப்படுகிறது. பொருளாதாரச் சுரண்டல், அரசியல் அடக்குமுறை, பேரினவாத ஒடுக்குமுறை போன்றவற்றையும் அவற்றின் அடிப்படைகளையும் புறம் தள்ளி விட்டு ஆணாதிக்கம் மட்டுமே பெண்களின் தனி ஒரு எதிரி என்பதாகக் காட்டப் படுகிறது. அதிலிருந்து விடுபட்டால் அதுவே பெண்ணிய விடுதலையாகும் என்ற மாயையும் பரப்பப்படுகிறது.

இவ்வாறான திசை திருப்பல்களில் சிக்காது முழுமையான சமூக விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் தமது ஒடுக்குமுறைகளையும் உடைக்கக் கூடிய வகையில் ஒன்றிணைந்து செயல்படுவதே பெண் விடுதலைக்கான மார்க்கமாகும்.

– ஆசிரியர் –

# பிரஜா உரிமை எப்படிக் கிடைத்தது!

## மலையக மக்கள் உண்மை அறிவார்கள்

**டி.கிருஷ்ணசாமி**

1986ஆம் ஆண்டு பிரஜாஉரிமை சட்டம் கொண்டுவரப்பட்டு 4 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு பிரஜாஉரிமை வழங்கப்பட்டதை இ.தொ.கா தலைவர் தொண்டமானின் சாதனையாக இ.தொ.கா.வினர் காட்டுவதுண்டு. தொண்டமானும் தனது சாதனை என்றே கூறிவருகிறார் 'பிரஜாஉரிமை வாங்கிக் கொடுத்தது நான் வேறு யார் யாரோ ஒட்டுக் கேட்டு வாறான்' என்று அடிக்கடி கூறுவார்.

1986ம் ஆண்டு பிரஜாஉரிமை சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது தொண்டமான் எம்.பியாக இருந்தபோதும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருக்கவில்லை. அவர் இந்தியாவில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கையை பார்த்தால் விவாதங்களிலும் கலந்து கொள்ள வில்லை என்பதும் அச்சட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்களிப்பிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பதும் தெளிவாகும்.

அச்சட்டம் நிறைவேற்றப்பட்டப் பிறகு இந்தியாவிலிருந்து கொண்டு 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் 'பிரஜாஉரிமை சட்டத்தை கொண்டுவருவது பற்றி தன்னிடம் இந்திய தூதரகமோ இந்தியாவோ கலந்து பேசவில்லை. சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போதும் இந்தியா தன்னிடம் கலந்து பேசவில்லை. வழமைபோல் இந்தியா இம்முறையும் என்னை ஏமாற்றிவிட்டது. இச்சட்டத்தால் காணிசமானோருக்கு பிரஜாஉரிமை வழங்கப்பட்டதாலும், பிரஜாஉரிமை பிரச்சினை முற்றாக தீர்க்கபடவில்லை என்று கூறியிருந்தார்.

எனவே 1986ஆம் ஆண்டு பிரஜாஉரிமை சட்டம் கொண்டுவரப் பட தான் எந்தவகையிலும் காரணமாக இருக்கவில்லை என்பதை மறைமுகமாகக் கூறியிருந்தார் என்பது தெளிவாகிறது.

1986இல் பிரஜாஉரிமை சட்டம் கொண்டுவரப்பட பல காரணங்கள் இருந்தன. அவற்றில் இந்திய அரசு ஜே.ஆர் அரசாங்கத்துக்கு கொடுத்த நிர்ப்பந்தம் பிரதானமாகும். இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் பிரஜாஉரிமை வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப் பட்டது. அவ்வொப்பந்தம் 1987இல் கைச்சாத்திடப்பட்டபோதும் 1985இல் அவ்வொப்பந்தத்தில் இடம்பெற்ற விடயங்கள் பற்றி இணக்கம் காணப்பட்டிருந்தன. அதில் பிரஜாஉரிமை வழங்குவது என்பது முக்கிய விடயமாகும்.

அவ்வொப்பந்தத்திற்கு அடிப்படை யாக அமைந்த திம்பு பேச்சுவார்த்தையில் பிரஜாஉரிமை வழங்கப்பட வேண்டும் என்பது தமிழ் அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது.

அப்பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலை கூட்டணியும், பிரதான தமிழ் போராட்ட இயக்கங்களும், இலங்கை அரச பிரதிநிதிகளும், இந்திய அரச பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அப்பேச்சு வார்த்தையில் தொண்டமான் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சட்டத்தின் மீது பாராளு மன்றத்தில் விவாதம் நடத்தி அச்சட்டத்தை நியாயப்படுத்திய ஐ.தே.கட்சி எம்பிக்கள்(ஏறக்குறைய) அனைவருமே பிரஜாஉரிமை பிரச்சினையை தீர்க்காவிட்டால் மலையக தமிழ் இளைஞர்களும் வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்கள் போன்று ஆயுதம் ஏந்தி போராடுவார்கள், அவ்வாறு போராடினால் நிலைமை மோசமாகி விடும் என்று குறிப்பிடத்தவறவில்லை.

அக்கால கட்டத்தில் இலங்கை தேயிலையில் தமிழ் தீவிரவாத இயக்கமொன்று விஷம் கலக்கப்பட்டுள்ளது என்ற பிரசாரத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்னெடுத்தது. அதனால் உலகசந்தையில் இலங்கை தேயிலைக்கு கிராக்கி குறைந்திருந்தது. இதனால் மலையகத்தில் தீவிரவாதம் தலையெடுத்துவிடக் கூடாது என்பதில் ஜே.ஆர் அரசாங்கம் கவனமாக இருந்தது. பிரஜாஉரிமை சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு அதுவும் ஒரு காரணம் என்பதை ஜே.ஆர்.ஜயவர்த்தனாவே ஒருமுறை கூறியிருந்தார்.

அதைவிடவும் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளை தொடர்ந்தும் ஐ.தே.கட்சி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உள் நோக்கமும் கொண்டிருந்தது. குறிப்பாக பிரேமதாஸ அவருடைய தேர்தல் வெற்றிகளை உறுதி செய்து கொள்ள திட்டம் கொண்டிருந்தார். அவரே பிரஜாஉரிமை சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே "நாடற்றவர்களாக இருந்தவர்களுக்கு பிரஜாஉரிமை வழங்க 1986ஆம் ஆண்டு பிரஜாஉரிமைச் சட்டத்தை நிறைவேற்ற தொண்டமானோ இ.தொ.காவோ எவ்வகையிலும் காரணமில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் மலையகத்தின் ஏனைய அமைப்புகள் போன்ற காலத்துக்கு காலம் இ.தொ.காவும் குரல் எழுப்பி வந்தது. பிரஜாஉரிமை வழங்கக்கோரி பிரார்த்தனைப் போராட்டம் மலையக தோட்டங்களில் நடைபெற்றது. அதில் இ.தொ.காவும் முக்கிய பாத்திரத்தை வகித்தது என்பதை மறுப்பதற்கில்லை. அதற்கும் மேலாக பிரஜாஉரிமையை வழங்குமாறு கேட்டு மலையகத்தில் எவ்வித பாரிய போராட்டமும் நடைபெறவில்லை. எனவே தனியே தொண்டமானோ இ.தொ.கா வோ மட்டும் போராடியதாக கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. ●

# யூ.என்.பி. செய்த அநீதிகளை

## மலையக பிரமுகர்கள் மறுப்பார்களா?

**பச்சைக் கிளி**

மலையக தமிழ் மக்களுக்கு கூடிய உரிமைகளையும் சலுகை களையும் யூ.என்.பியே வழங்கியது என்று யூ.என்.பியின் மலையகத் தமிழ் பிரமுகர்கள் கூறிவருகிறார்கள். இது உண்மையா?

※ 1977, 1981, 1983, 1986 இனவன்முறைகள் இடம்பெற்றது. யூ.என்.பி ஆட்சிகாலத்திலேயே.

※ 1986 பிரஜாஉரிமை சட்டம் இந்தியாவின் நிர்ப்பந்தத்தினாலேயே நிறைவேற்றப்பட்டது. அவ்வேளை பாராளுமன்றத்தில் உரையாற்றிய காமினி திஸாநாயக்க உட்பட பலர் தோட்டத் தொழிலாளர் பெரும் பான்மையாக வாராதவாறு தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார் என்பது நினைவில் கொள்ளல் வேண்டும்.

※ 1986இல் தலவாக்கொல்லை மட்டக்கெலே தோட்டத்தில் தொழிலாளர் தலைவர் ஒருவர் காணாமல் போனார், அதனை யடுத்து இன்னொரு தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார்.

※ தனியார் கம்பெனிகளின் இன்றைய கொடுமைகளுக்கு அடித்தள மிட்டது யூ.என்.பியே 1991 இல் தோட்டங்களை தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைத்தது யூ.என்.பி.யேயாகும்.

※ இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்ப முயற்சிகள் எடுக்கப் பட்டது. பெருந்தோட்ட அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரட்ன அம்முயற்சிகளை மேற்கொண்டார். இந்திய பாஸ்போர்ட் பெற்றிருந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை மறுத்து அவர்களை தற்காலிக வேலையாட்களாக 'செக்ரோலில்' கடைசிப்பக்கத்தில் பதிவு செய்தார்.

※ இந்தியா மறுப்பு தெரிவித்த தாலும், மலையகத் தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டியதாலும் இந்திய பாஸ்போர்ட் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

※ யூ.என்.பி ஆட்சிக் காலத்திலேயே பயங்கரவாதிகள் என்று பெரும் எண்ணிக்கையிலான மலையகத் தமிழ் இளைஞர்க்ள் கைது செய்யப்பட்டனர். விசாரணை இன்றி சிறைகளில் அடைக்கப் பட்டனர்.

※ 17 வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சி நடத்தியும் மலையக மக்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் கூட வழங்கப்பட வில்லை.

※ அத்தியாவசியப் பொது சேவைகள் சட்டத்தைக் கொண்டுவந்து வேலைநிறுத்தம் செய்யும் தொழிற்சங்க உரிமையையும் யூ.என்.பி பறித்தது.

※ காணிகளைப் பறித் தெடுத்து சிங்கள மக்களுக்கு பிரித்துக் கொடுத்து தமிழ் சிங்களப் பகமையை வளர்த்ததுடன் தமிழர்களுக்கு காணி வழங்க மறுத்துக்கொண்டது. ●

நன்றி - நூலகத்திட்டம்



# இந்து ராம் ராஜ்யம்

சென்னையிலிருந்து வரும் ஃபுறொண்ட்லைன் ஏட்டின் ஆசிரியர் என். ராம் டிசெம்பர் மாதம் சந்திரிகா குமாரதுங்கவைக் கொழும்பிற் செவ்வி கண்டார். இது அரசாங்கச் சார்பு ஏடொன்றில் முழுமையாகப் பிரசுரமானது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவையும் அவர் செவ்வி கண்டார். அதுவும் இங்கு பிரசுரமானது. அவற்றின் முக்கிய பகுதிகள் தமிழிலும் வெளியாயின. இந்த நேர் காணல்கள் ஃபுறொண்ட்லைனிலும் வெளியாயின. இவற்றுக்கான தீடீர்த் தேவை என்ன?

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சில வாரங்கட்கு முன்பு வெளியான தனது 'மாவீரர் தின' அறிக்கையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கும் போர் நிறுத்த முயற்சிக்கும் ஆயத்தமாயிருப்பதாயும் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்புவதாகவும் கூறியிருந்தார். விடுதலைப் புலிகள் பற்றிய பல வேறுபட்ட கருத்துக்களை உடையோராயினும், அமைதியை வேண்டுகிறவர்களான பலரால் இது உற்சாகமாக வரவேற்கப்பட்டது. போர் மூலம் அமைதியை வரவழைக்கும் அரசியற் கொள்கைக்கு இந்த வரவேற்பு சில இக்கட்டுக்களை ஏற்படுத்தியது.

அரசாங்கம் போரில் தொடர்ந்து பெறும் வெற்றிகளின் விளைவாகவே விடுதலைப் புலிகள் ஒரு படி கீழிறங்கி வந்துள்ளனர் என்ற வாதம் அரசாங்கத்தின் கிளிநொச்சிப் படு தோல்வியின் பின்னணியில் மக்களிடம் எடுபடவில்லை. பிரபாகரனது நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களை அரசாங்கத் தரப்பு எழுத்தாளர்களும் பேரினவாதப் போர் வெறியர்களும் ஒரே விதமாகவே எழுப்பினர். இந்தச் சூழ்நிலையில், பிராமணிய, இந்திய மேலாதிக்கவாத நிறுவனமான இந்து பத்திரிகைக் குடும்பத்தின் உறுப்பினரும் தன்னை ஒரு இடதுசாரியாகக் காட்டிக் கொண்டு வருகிறவருமான என்.ராம், சனாதிபதியின் துணைக்கு வந்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது பற்றி சனாதிபதி சந்திரிகாவுக்குச் சிறிதளவு சபலம் இருந்தாலும் அது இருக்கவே கூடாது என்பதில் ராம் தீவிரமாக இருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. இந்த நேர்காணலில் சனாதிபதியின் நிலைப்பாட்டையோ நோக்கங்களையோ விளக்கி விரிவுபடுத்தி விசாரிக்கும் முயற்சியே காணப்படவில்லை. அதைவிட முக்கியமாக, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை சந்திரிகாவை விட ராம் எதிர்த்து நிற்பது மிகவும் தெளிவாகவே தெரிந்தது.

பிரதான எதிர்க்கட்சியான யூ.என்.பியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவின் நேர்காணலில் ராம் விடுதலைப்புலிகளுடன் பேச அவசியமில்லை என்ற கருத்தை வலியுறுத்த முற்பட்ட போதும், ரணிலுடைய நோக்கம் அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பைப் பலவீனப் படுத்தி விட்டது என்று காட்டுவதாகவே இருந்தது. மொத்தத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றி ராமின் அக்கறை, விடுதலைப் புலிகளின் அழிப்பை விட வேறெதுவும் பற்றியதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் தரப்பிலோ புதிய இடதுசாரி முன்னணியினர் தரப்பிலோ கருத்துரைக்க எவரும் அணுகப்படவில்லை.

மேலே குறிப்பிட்டதை உறுதிசெய்யும் விதமாகவே ஃபுறொண்ட்லைனில் ஐந்தாறு வருடங்கட்கும் மேலாகக் கட்டுரைகள் வந்துள்ளன. எவரும் விஷயம் அறிந்தா எழுதுகிறார் என்றதைவிட, ராமின் அகச்சார்பான விடுதலைப் புலி எதிர்ப்பே கட்டுரைகளின் பிரசுரத்துக்குக் காரணமானது. சந்திரிகாவின் நேர்காணலுக்கு ஒரு மாதம் முன்னம், றோஹான் குணரத்ன எனும் சிங்களப் பேரினவாதியும் படுபிற்போக்குவாதியுமான 'ஆய்வாளர்' ஒருவர் விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்காவிற் செயற்படுவது பற்றி எழுதிய கட்டுரை ராமின் ஃபுறொண்டலைனில் வந்தது.

ராம் மாணிக்கலிங்கம், டி.பி.எஸ்.ஜெயராஜ் போன்று விடுதலைப் புலி எதிர்ப்பை விட வேறு அடிப்படையே இல்லாமல் எழுது வோருடைய கட்டுரைகள் பல வெளியான ஃபுறொண்டலைனில் 'மனித உரிமைக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)' என்ற பேரில் இயங்கும் ஒரிருவர் விடுத்த அறிக்கையும் ஒரு முறை பிரசுரமாகி இருந்தது பற்றி அதிசயமில்லை. அதில் வெளிவரும் செய்திகள் அண்மைக் காலங்களில் அரசாங்கத்தின் ராணுவ வெற்றிகளை மிகைப்படுத்தியும் தோல்விகளைக் குறைவு படுத்தியும் காட்டியுள்ளன. இத்தகைய போக்கு இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற நிறுவனங்களின் ஏடுகட்கு இயல்பான



ஒன்றுதான். ஆனால், ராம் 'இந்து' நிறுவனத்தின் 'சிவப்புப்' பிள்ளை. இன்று இந்துத்துவத்துக்கும் காந்தியத்துக்குமிடையே ஊசலாடும் இந்து நிறுவனம், பிரிட்டிஷ் ஆட்சியாளர் காலத்தில் அவர்களையும் பகைத்துக் கொள்ளாமல் சுழியோடிச் சமாளித்தது. இப்பத்திரிகை முதலாளிக் குடும்பத்தின் கிளர்ச்சிக்காரக் குழந்தையான ராம், போஃபர்ஸ் பீரங்கி விற்பனை ஊழலில் ராஜீவ் காந்தியின் பங்கை அம்பலப் படுத்திய குறும்புத்தனத்துக்காகக் குடும்பத்தவரிடம் குட்டு வாங்கி, இந்து பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்புக்களினின்று ஒதுக்கப்பட்ட காரணத்தால் முற்போக்கு வட்டாரங்களில் நல்ல பேர் வாங்கியவர்.

காங்கிரஸுக்கு எதிரான அரசியற் பிரசாரத்தில் ராமின் பங்களிப்பு அவரை இந்திய (மாக்ஸிஸ்ட்) கம்யூனிஸ்ட் கட்சியின் (சி.பி.எம்.) தலைமைப் பீடத்திற்கு மேலும் நெருக்கமானவராக்கியது. இன்றும் இந்துத்துவ எதிர்ப்பு, இந்தியக் தேசியம், சி.பி.எம். ஆதரவு, ஏதோ வகையான ஒரு இடதுசாரி உலகக் கண்ணோட்டம் என்பனவே ராமையும் ஃபுறொண்ட்லைனையும் அடையாளங்காட்டுகின்றன, போர்பர்ஸ் ஊழல் விஷயத்தில் ராம் இந்து நிறுவனத்திற்கு மேலும் தலை வலியை ஏற்படுத்தாமல் இருப்பதற்காகவும் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்புக்களினின்று ஒதுக்கப்பட்டதற்கு நட்டஈடாகவும் 1974ல் தொடங்கப்பட்ட ஃபுறொண்ட்லைணை அவரது பூரண கட்டுப்பாட்டில் வெளியிட அவருக்கு உரிமையும் வசதிகளும் வழங்கப்பட்டன. அவற்றை மிகவும் திறமையாகவே அவர் பயன்படுத்தியுள்ளார்.

**இந்திய பத்திரிகையாளர் என்.ராம் இலங்கை இனப்பிரச்சினையில் ஆளும் பேரினவாதிகளின் பக்கமா? அல்லது அடக்கப்படும் தமிழ் மக்களின் பக்கமா?**

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் ராம் காட்டிய அக்கறைக்கும் இந்திய உளவு நிறுவனமான 'றோ' காட்டிய அக்கறைக்குமிடையில் முக்கியமான ஒரு ஒற்றுமையைக் காணலாம். தொடக்கத்தில் விடுதலைப் புலிகளுடன் மிகுந்த பாசமும் ஆதரவும் பின்பு எதிர்ப்பும் விடுதலைப் புலிகளை அழித் தொழிக்கும் வெறியும் என்றவிதமான போக்குக்கள், விடுதலைப் புலிகள் பற்றி ராமின் நிலைப்பாடு, தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவை விட இந்திய அதிகார வர்க்க நலன்களையே முதன்மைப் படுத்தும் நோக்கை அடையாளம் காட்டுகின்றன. இது றோவும் ராமும் ஒரே விதமாக நோக்குவதை விளக்கப் போதுமானதல்ல, ராமை றோவின் ஆளென்று கூற முழுமையான ஆதாரமும் இல்லை.

அண்மைக்காலமாகச் சந்திரிகா குமாரதுங்கவின் அபிமானியாகவே மாறிவிட்ட ராம், இந்திய–இலங்கை வர்த்தக உடன்படிக்கையை மகிழ்வுடன் வரவேற்றதிலும் நமக்கு அதிகம் அதிசயமில்லை. ஏனெனில் அன்று இதே ராம், பழம் நழுவிப் பாலில் விழுவது மாதிரி சனாதிபதித் தேர்தலின் போது, யூ.என்.பி. வேட்பாளராக முன்நிறுத்தப்பட்ட காமினி திஸ்ஸாநாயகவின் பெரும் ஆதரவாளராகவே தன்மைக் காட்டிக் கொண்டவர். இதில் மாக்ஸியத்தையோ வேறு தெளிவான எந்தவொரு அரசியல்



பார்வையையோ காணுவதில் பலருக்கு சிரமம் இருக்கலாம். மறுபுறம் ராமின் நிலைப்பாட்டை இந்திய அதிகார வர்க்கத்தின் பிராந்திய மேலாதிக்கத் தேவைகளுடன் சேர்ந்து நோக்கினால் ராமும் புதிய இந்திய மகா ராஜ்யக் கனவு காண்போருள் ஒருவரே என்பது விளங்கும். காங்கிரஸ் தலைமைக்கும் ராம் போன்ற இடதுசாரித் தோற்றக் காரர்கட்கும் உள்ள வேறுபாடு அந்தக் கனவை எவ்வாறு நனவாக்குவது என்பதிலேயே தங்கியுள்ளது.

தேசிய விடுதலைப் போராட்டங்களை எதிர்ப்பதிலும் விடுதலைக்கான ஆயுதமேந்திய போராட்டங்களைப் பயங்கரவாதம் என்று நிராகரிப்பதிலும் ராமுக்கும் உலகின் பல்வேறு மேலாதிக்கவாதிகட்கும் எந்த வேறுபாடும் இல்லை.

கியூபா, வடகொரியா போன்ற நாடுகள் விடயத்தில் ராம் காட்டும் ஆதரவும் சீனாவுடன் இந்திய நல்லுறவு பற்றிய அக்கறையும் அவரது உலக அரசியல் நோக்கின் சாதகமான அம்சங்கள். ஆயினும் காம்போஜத்தில் அவர் வியற்நாமிய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தியதோடு இறுதி வரை க்மெர்ரூஜ் (செங் க்மெர்) இயக்கத்தை வன்மையாக எதிர்த்தவரும் ஆவார். பிலிப்பினிய கம்யூனிஸ்ட் விடுதலைப் போராளிகள் பற்றியும் பிலிப்பின்ஸின் மித்தனாவே விடுதலை இயக்கம் பற்றியும் அவருக்கு அதிக அனுதாபம் இல்லை. இந்தியாவினுள் காஷ்மிர விடுதலைப் போராளிகள் பற்றியும் அவரது பார்வை அடிப்படையிற் பகைமையானது. வெறுமனே இந்திய தேசிய ஒருமைப்பாடு, வன்முறை எதிர்ப்பு என்கிற பார்வைகளை மட்டுமே நியாயமாக வைத்தே தேசிய இன ஒடுக்கலை இவர் போன்றோரால் நியாயப்படுத்தப் படுகிறது.

சீனாவின் அரசியலும் பொருளாதாரமும் இன்று போகும் திசையையும் ராம் அங்கிகரிப்பது நமக்கு வியப்பளிக்கவில்லை. ஏனெனில் மாஓ சேதுங்கின் புரட்சிகர வெகுஜன அரசியலோ மக்கள் யுத்தமோ அவருக்கு உடன்பாடானவையல்ல.

ராமின் இடதுசாரித் தோற்றத்தை வைத்துச் சி.பி.எம். சிறிது நன்மை பெறுகிறது. செய்தி ஊடகங்களிற் சி.பி.எம்.மின் பலவீனத்தை ஈடுகட்டுவதிலும் அரசியல் பேரங்களிலும் ராம் ஒரு பயனுள்ள மனிதர். ஆயினும் சி.பி.எம். இதற்காக எந்த விலையும் கொடுக்கத் தயாரா?

சி.பி.எம். பெரளவிலேனும் மாக்சியம் லெனினியம் எனவும் ஆயுதம் ஏந்திய புரட்சி என்றும் ஏற்றுக்கொண்டுள்ள கட்சி, அதன் நடைமுறையோ பாராளுமன்ற சீர்திருத்தவாத அரசியலில் அழுத்திக் கிடக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்தால், தேர்தல் லாபம் கருதி, ஒரு புறம் இந்திய தேசிய நலன்கள் பற்றிப் பேசிக் கொண்டு இந்தியப் பெருமுதலாளிகளின் நலனைப் பேணுகிற ஒரு தலைமையைக் கொண்டதும் மறுபுறம் சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை ஏற்படுத்திக் கொண்டு ஊழற்காரர்களோடும் சாதிய, மதவாத அரசியலில் புரளுகிற அரசியற் பெருச்சாளிகளோடும் ஒட்டி உறவாடுகிறதுமான கொள்கை இல்லாத கும்பலாக சி.பி.எம். சுருங்கி விடும். இந்திரா காந்தியின் சர்வாதிகார ஆட்சியில் பங்காளிகளாகித் தமது சீரழிவை முழுமைப் படுத்திய சி.பி.ஐக்கு ஏற்பட்ட கதி சி.பி.எம்முக்கும் ஏற்படக் கூடாது என்பது என் ஆசை.

சி.பி.எம் தனது அரசியலை மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு பாராளுமன்ற அரசியற் கட்சியாக இல்லாமல் அது ஒரு வெகுஜனப் போராட்டச் சக்தியாக மாறுவது இன்று எளிதான காரியமல்ல. ஆயினும், சாதியம், தேசிய இனப்பிரச்சினை, பெண்ணுரிமை, விவசாயிகளின் நிலவுரிமைப் பிரச்சினை போன்றவற்றில் கம்யூனிஸ்ட் கட்சி 1950களில் கடைப்பிடித்த போராட்ட மார்க்கத்தின் வழியில் உறுதியாக நின்று ஒரு புதிய பாதையை அது தேடாவிடின் அதன் எதிர்காலத்திற்கான முன்னுதாரணங்களாக அமையப் போகிறவை இலங்கையின் திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியுமே தாம்.

இந்தியாவின் புரட்சிகரச் சக்திகளுடனும் வெகுஜனப் போராட்டச் சக்திகளுடனும் இணைய முடியாவிட்டாலுங் கூட அவற்றுடனான ஒரு நல்ல உறவையர்வது பேணுகிற முயற்சியாவது அக்கட்சியின் நல்ல சக்திகளால் எடுக்கப்பட வேண்டும். சி.பி.எம்மின் உள்ளும் வெளியிலும் அதை வாயளவில் முற்போக்கானதும் நடைமுறையில் இந்திய மேலாதிக்கவாதப் பிற்போக்குத் தன்மையுடையதுமாக மாற்றும் சக்திகள் மும்முரமாகச் செயற்படுகின்றன. அவற்றுள் இந்து ராம் முக்கியமான ஒருவர். சி.பி.எம்மின் தவறான போக்குக்களை மிகவும் ஊக்குவிக்கும் இத்தகைய நபர்கள் மூலம் அக்கட்சி ஆற்றக் கூடிய குறைந்தபட்ச முற்போக்கான பணி கூடப் பாழாகிவிடும் என்பதை இந்திய முற்போக்குச் சக்திகள் கவனத்திலெடுக்க வேண்டும்.

-இந்திரன்-

நன்றி - நூலகத்திட்டம்



# தரப்படுத்தலும் தடுமாற்றமும்

## தந்தையும் மைந்தரும் (13)

செல்வநாயகம் சொன்னது ஒருவேளை கடவுளுக்குச் சரியாகக் கேட்கவில்லையோ தெரியாது. தமிழர்களைக் காப்பாற்றுகிற விதமாகக் கடவுள் ஒன்றும் செய்யாவிட்டாலும் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்றுகிற விதமாகக் கொஞ்சம் செய்தார். போலவே 1970ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின் பின்பாக நிகழ்வுகள் அமைந்தன.

ஸ்ரீ.ல.சு.கட்சியும் பாராளுமன்ற இடதுசாரி கட்சிகளும் 1956ம் ஆண்டு தேர்தல் வெற்றியோடு யூ.என்.பி ஒழிந்தது என்று குதூகலித்தன ஆயினும் 1960ல் யூ.என்.பி. தனது வலிமையைக் காட்டியது, 1965ல் ஆட்சி அமைத்தது. 1977ல் ஸ்ரீல.சு.கட்சியும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளான லசசகட்சியும் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்த கூட்டணி பெற்ற வெற்றி முன்னைய 1956, 1960 வெற்றிகளை விடப் பெரியது தான். எனினும் அது எந்த வகையிலும் யூ.என்.பியின் முடிவல்ல. இதை ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமையிலான அரசாங்கம் சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை.

யூ.என்.பியை நிரந்தரமாக முறியடிப்பதாயின் வெகுஜன மட்டத்தில் மிகவும் தீவிரமான அரசியல் வேலை தேவை. கட்சி அரசியல் வெகுஜன அரசியலாக்கப் பட வேண்டும். பாராளுமன்றப் பதவி பெற்று நாட்டைச் சோஷலிசப் பாதையில் திருப்பலாம் என்று நினைப்பதன் அபத்தத்தை அரசில் அங்கம் வகித்த இரண்டு பிரதான இடதுசாரிக் கட்சிகளும் உணரவில்லை. இதில் ல.ச.ச.கட்சித் தலைமையின் நடத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் நடத்தையை விட ஒரு படி அதிக திமிர்த்தன்மையுடைய தாகவே தென்பட்டது.

தேசியமயமாக்கல் என்பது தமது அரசியல் எதிரிகட்கு எதிரான பழிவாங்கல் நோக்குடன் பயன்பட்ட சில்லரைத் தனமான அரசியலை 1970களில் நாம் கண்டோம். வடக்கு கிழக்கின் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை பற்றி மிகவும் அசட்டையான மனோபாவம் அரசாங்கத்திற் பரவலாகவே இருந்தது. மலையகத் தமிழர் பற்றியும் பகைமை கொண்ட சக்திகள் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்களில் இருந்தன. செல்லையா குமாரசூரியர் என்ற அரசியல் அநாமதேய மனிதரை நியமன உறுப்பினராக்கி அமைச்சராகப் பதவியளித்ததன் மூலம் அன்றைய அரசாங்கம் தமிழர் ஒருவரை அமைச்சரவையில் காட்சிப் பொருளாக வைத்ததற்கு மேலாகத் தமிழ் மக்களுக்குச் சாதகமாக எதையும் செய்யவில்லை.

தமிழரசுக் கட்சி மீதான பகைமை பற்றி அரசாங்கத்தில் ஒளிவு மறைவு இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு எந்த நிலையிலும் ஆயத்தமாக இருக்கவில்லை. 1965ல் யூ.என்.பியுடன் ஏற்படுத்தப்பட்ட வர்க்க உறவு இன்னும் இருபது வருடங்கட்கும் மேலாகத் தளர மறுத்தது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பான முதலாவது பெரிய சோதனை தரப்படுத்தல் சம்பந்தமான பிரச்சனையாக உருவெடுத்தது. 1970ம் ஆண்டு க.பொ.த உயர் நிலைப் பரீட்சைப் பேறுகளின் படி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியற் பீடத்தின் 150 இடங்களுக்குத் தகுதி பெற்றோரில் 120 பேர் அளவில் தமிழர். இது தற்செயலான ஒன்று. ஏனெனில் இதற்கு முன்பு எந்திரவியற் பீடத்திற்கு அனுமதிக்கப் பட்ட தமிழ் மாணவர்களது சதவிகிதம் 30க்கும் 50க்கும் இடையில் இருந்தது. 80% பேரான உயர்வு புள்ளிவிபர அடிப்படையில் சாத்தியமான ஒரு நிகழ்வு என்பது போக, பாடசாலைக்கு வெளியே ட்யூஷன் மூலம் மாணவர்கள் பயிற்றுவிக்கப் படும் வழமை வடக்கில் வேரூன்றி விட்டதும் பரீட்சை முடிவுகளைப் பாதித்தது என்று கருத இடமுண்டு.

ஆயினும் யூ.என்.பி., ஜே.வி.பி. போன்ற அரசாங்க எதிர்ப்புச் சக்திகள் இப் பிரச்சினை தொடர்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதப் பிரச்சாரத்தை ஊக்குவித்தனர். உறுதியுடனும் நடுநிலையுடனும் நிற்க வேண்டிய அரசாங்கமும் தன் மத்தியிலிருந்த இனவாதிகளது கூக்குரலுக்குப் பணிந்தது. முதலில், தமிழ்ப் பரீட்சகர்கள் தமிழ் மாணவர்கட்குச் சாதகமான முறையில் தாராளமாகப் புள்ளிகளை வழங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. வினாத்தாள்கள் முன் கூட்டியே வெளியில் வந்ததாகவும் சிலர் சந்தேகம் தெரிவித்தனர். ஆயினும் விரிவான அரசாங்க விசாரணைகள் இக் குற்றச் சாட்டுக்கள் எதிலும் உண்மை இல்லை என்றே நிரூபித்தன. ஆயினும் இந்த முடிவு வருவதற்கு முன்னமே, மொழி அடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகளைத் தரப்படுத்துவது என்ற மிகவும் தவறான ஒரு முடிவை அரசாங்கம் நடைமுறைப் படுத்த ஆயத்தமாகி விட்டது.



இதன் விளைவாக யாழ்ப்பாண மாணவர்கள் மத்தியில் மிகுந்த கோபம் மூண்டது. இதைச் சிங்கள மக்களுக்கும் எதிராகவும் (பதியுதீன் முகமத் கல்வி அமைச்சராக இருந்த காரணத்தால்) முஸ்லிம் கட்கு எதிராகவுமான ஒரு இனவாதக் கோணத்தில் திருப்புகிற விஷமத்தனமாக முயற்சிகள் சில மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் வட பகுதித் தமிழ் மாணவர்களது எதிர்ப்பு, அடிப்படையில் மிகவும் நிதானமான முறையிலேயே வெளிப்படுத்தப்பட்டது. அதேவேளை தீவிரமான தமிழ்த் தேசியவாதச் சக்திகளை முடக்கி விடுவதில் தரப்படுத்தலுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

தரப்படுத்தல் இன்னொரு முக்கியமான கேள்வியை எழுப்பியது. மாணவர்கள் எல்லாருக்கும் சமவாய்ப்பு இல்லாத ஒரு சூழலில், குறைந்த வாய்ப்புடைய மாணவர்கட்குச் சலுகைகள் வழங்குவது நியாயமானது என்ற கருத்து 'ஜனவேகம்' என்ற பேரில் ஸ்ரீ.ல.சு.கட்சி இடதுசாரிக் குழு ஒன்று நடத்திய ஏட்டில் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளரால் முன்வைக்கப்பட்டது. இதன் படி, பின் தங்கிய பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கட்குச் சலுகைப் புள்ளிகள் வழங்கப்படுவதன் மூலம் பாடசாலைகளிடையிலான சமனின்மையைச் சிறிது ஈடுசெய்யலாம் என்று கூறப்பட்டது. இந்த வாதம், உயர் கல்வி பற்றிய பிரச்சினையை வெறும் இன அடிப்படையில் நோக்குவதற்கு மாறாக ஒரு வர்க்கப் பரிமாணத்தை வலியுறுத்த முற்பட்டது. இக் கட்டுரை ஏனோ ஜனவேகத்தின் சகோதர சிங்கள ஏடான 'ஜனவேகய'வில் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தமிழரசுக்கட்சியால் தரப்படுத்தலுக்கு மாற்றாக ஆக்க பூர்வமான எந்த யோசனையையும் முன் வைக்க இயலவில்லை. அது மட்டுமல்லாமல், 1973க்குப் பின்பு தரப்படுத்தல் முறை சிறிது மாற்றியமைக்கப் பட்டு மாவட்ட அடிப்படையிலான விகிதாசார அனுமதியும் புகுத்தப்பட்டது. இதன் விளைவாக, வடக்கு–கிழக்கில், யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற மாவட்ட மாணவர்கள் சிறிது பயனடைந்தனர். இதையடுத்து யாழ் மாவட்டத்தில் இருந்த கிளிநொச்சியை ஒரு தனி மாவட்டமாக்கும் கோரிக்கையும் தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்தே எழுந்ததையும் நாம் பின்னர் கண்டோம். மாவட்ட அடிப்படையிலான அனுமதி என்ற கருத்தாக்கத்தைப் புகுத்துவதில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான பீற்றர் கெனமனின் பங்கு முக்கியமானது. இது ஒரு புறம் தமிழ் மாணவர்களின் அதிருப்தியைச் சிறிது தணித்ததோடு தமிழ் மாணவர்களிடையே பிரதேச வேறுபாட்டு உணர்வுக்கும் ஒரு புதிய ஊட்டத்தை அளித்தது. (பின்னாளில் மாவட்ட அடிப்படையிலான அனுமதி வசதி படைத்த சில பெற்றோரால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டதையும் நாம் அறிவோம். இது வேறு பிரச்சினை.) தமிழரசுக் கட்சித் தலைமை சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவை அனைத்திலும் நாம் கண்ட முக்கியமான ஒரு அம்சம் ஏதெனில், தமிழரசுக்கட்சியால் சிங்களப் பேரினவாதிகளின் தரப்படுத்தலுக்காக முன்வைத்த இனவாதக் கோட்பாட்டை முறியடிக்கும் விதமாகச் சமூக நீதியின் அடிப்படையிலான ஒரு ஆலோசனையை முன்வைக்க முடியவில்லை என்பது தான். அவர்களது வர்க்க நலன்கள் அதை என்றுமே அனுமதித்திராது என்பதும் நாம் அறிந்த உண்மை. தரப்படுத்தலைத் தமது தமிழ்த் தேசியவாத அரசியலை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்த மட்டும் அவர்கள் என்றுமே தயங்கவில்லை.

அதேவேளை, பாராளுமன்ற இடதுசாரிகள் தரப்படுத்தல் பற்றி எதிர்ப்புக் குரல் எழுப்புவதற்குத் தயங்கினர். இந்தச் சூழலில் தமிழ் மாணவர்களது விரக்தியின் உதவியுடன் வடக்கில் இன்னொரு வகையான அரசியலுக்கான அத்திவாரம் இடப்பட்டது.

வடக்கிலும் தெற்கிலும் இளைஞர்கள் எதிர் நோக்கிய கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்புக் குறைபாடுகளின் அடிப்படையான காரணம் தமிழ்–சிங்கள முரண்பாடு என்ற பார்வை இரு தரப்பிலும் இனவாதிகளால் ஊக்குவிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்துக்கு போக வாய்ப்பே அற்ற பெருவாரியான இளைய பரம்பரையினரை ஏய்க்கவும் இனவாதம் பயன்பட்டது. இந்த விஷவித்துக்களின் விளைச்சலையும் அறுவடையையும் விதைத்தவர்கள் மட்டுமன்றி மௌன சாட்சிகளாகப் பார்த்து நின்றவர்களும் இங்கு விரைவிலேயே காண நேர்ந்தது.

# சாதி அமைப்பும் தீண்டாமை ஒழிப்பும்


## தோழர் எஸ்.ரி.என். 10வது ஆண்டு நினைவாக

**வெகுஜனன்**

இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் பேணி வளர்க்கப்பட்டு வந்த சாதிய அமைப்பு இன்றும் வலுவுள்ளதாகவே இருந்து வருகின்றது. இச் சாதிய அமைப்பு நிலவுடமை – முதலாளித்து அமைப்புகளுடன் கைகோர்த்து செயல்படுகிறது. செய் தொழிகள் மூலம் சாதியம் வகுக்கப்பட்டதுடன் படிநிலை அமைப்பில் மேல் இருந்து கீழ் வரை நிலை கொள்ள வைக்கப்பட்டது. அதி உயர் நுனியிலே பிராமண சாதியும் அதிலிருந்து கீழே ஒவ்வொரு சாதியும் ஒன்றன் கீழ் ஒன்றாகப் படிநிலைப்படுத்தப் பட்டது. அடி நிலையிலே பள்ளர் பறையர் சக்கிலியர் என அழைக்கப்படும் உழைப்பாளி மக்கள் அடிநிலைச்சாதிகளாக அமர்த்தப் பட்டனர். இவர்கள் சூத்திரர் எனப்படும் நான்காவது வர்ணாச்சிரம பகுப்புக்கும் அப்பால் தீண்டப்படாத பஞ்சமர் சாதிகளாகக் கொள்ளப்பட்டனர். ஊர் என்னும் உயர்ந்தோர் எனப்பட்டவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அப்பால் சேரி, குப்பம் ஆகிய கழிவிடங்களில் ஒதுக்கப்பட்டவர்கள் என்னும் பெயருடன் வாழுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர் இவர்கள் பார்த்தால், தொட்டால், நடந்தால் எல்லாம் தீட்டு என்று கூறி முற்றிலும் இவர்கள் மீது தீண்டாமை பாராட்டப்பட்டது.

இந்தியாவைப் பெறுத்தவரை மேற்கூறிய நிலை தொடர்கின்றது. அங்கு சாதியம் ஒரு அமைப்பாக நீடிக்கிறது. சாதிய அமைப்பு முறைமையின் கேடுபற்றி தீண்டாமைக் கொடுமை பற்றி எத்தனையோ ஆன்மீக முன்னோடிகள் சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் எடுத்துரைத்தும் அங்கு அது போக்கடிக்கப்படவில்லை. இந்திய அரசியல் சாசனத்தில் அது பற்றி விஷேடமாகக் குறிப்பிடப்பட்ட பின்பும் அதன் அடிப்படையில் சாதிய தீண்டாமைக்கு எதிரான சட்டங்கள் வரையப்பட்ட பின்பும் சாதிய அமைப்பில் அங்கு மாற்றங்கள் ஏற்படவில்லை.

இந்தியாவின் தென் மாநிலங்களில் அடிக்கடி இடம் பெறும் சாதிய மோதல்கள் இந்திய சாதிய அமைப்பை எடுத்துக்காட்டும் ஒரு உதாரணம் மட்டுமே. ஆனால் தென்மாநிலங்களையும் தாண்டி வட மாநிலங்களில் அதன் அகோரத்தனம் மிக கடுமையானதாகும். அண்மைய உதாரணம் தான் அரசியல் சர்ச்சைக்குரிய பீகார் மாநிலமாகும். அந்த அரசியல் சர்ச்சையின் ஒரு பகுதி அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் எனப்படும் தலித் மக்களுக்கு இழைக்கப் படும் கொடிய அநீதிகளும் படுகொலைகளுமாகும். உயர் சாதி எனப்படுவோர் இதற்கென தமக்குள் ஒரு படைப்பிரிவையே உருவாக்கி பயிற்சி அளித்து வைத்துள்ளனர். 'ரண்வீர்' எனப்படும் இப்படைக் கும்பல் தலித் மக்களது குடியிருப்புகளில் புகுந்து வயது பால் வேறுபாடின்றி கொலை வெறித் தாண்டவம் ஆடி நிற்கின்ற செய்திகள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இக் கொடுமையைத் தாங்க முடியாத பிகார் தலித் மக்கள் நக்சலைட்டுக்கள் எனப் பத்திரிகைகளால் அழைக்கப்படும் கம்யூனிஸ்ட் தலைமறைவுக்



கொரில்லாக்களுடன் இணைந்து இச் சாதிய கொலைவெறிக் கும்பல்களை எதிர்த்துப் போராடி வருகின்றனர். அவ்வாறான போராட்டத்தில் கொல்லப் படும் ஒவ்வொரு 'ரண்வீர்' படைக் கும்பலைச் சேர்ந்த உறுப்பினருக்கும் இரண்டு லட்சம் ரூபா நஷ்ட ஈடு மாநில அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. இந்த மாநில அரசு தான் 750கோடி ரூபா கால் நடைத் தீவன மோசடி ஊழலில் சிக்கி பதவி இழந்த போதும் தனது மனைவியை முதல்வராக்கிய லல்லு பிரசாத் யாதவவின் தலைமையிலான அரசாங்கமாகும்.. முற்றிலும் சாதிய அமைப்பைக் கட்டிக் காத்துவரும் ஒரு மாநில அரசாக அது இருந்து வருகிறது. இத்தகைய மனிதரான லல்லு தான் இந்தியாவில் பெண்களுக்கு 33சத வீத ஒதுக்கீட்டை எதிர்த்து வரும் பிற்போக்குவாதியுமாவார்.

இந்தியாவில் இவ்வாறு நிலைத்து நின்று செயலாற்றி வரும் சாதியம் தீண்டாமை இலங்கையில் தமிழ் சிங்கள மக்களிடையேயும் வெவ்வேறு அளவுகளில் இருந்து வந்துள்ளன. இன்றும் அதன் சமூகத் தாக்கம் இருக்கவே செய்கிறது.

7ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# ஆறுமுகம் தொண்டமானுக்கு முட்டுக்கொடுக்க புதிய ஆசாமி


ஆறுமுகம் தொண்டமான் பண்ணுகிற அடாவடித்தனம் எல்லாத்தையும் நியாயம் என்று சொல்ல இப்போது ஒரு புது ஆசாமி வந்திருக்கிறார். அவர் சரிநிகர் பேப்பரில் ஆஸ்பத்திரியிலே போய் தொண்டமான் பேரன் பண்ணின அட்டகாசத்தையெல்லாம் ஞாயம் என்று வக்காலத்துப் பண்ணி எழுதியிருக்கிறார்.

நடு ராத்திரியிலே ஆஸ்பத்திரிக்குப் போய் அட்டகாசம் பண்ணுகிற முதல் அரசியல் புள்ளி இவரில்லை. என்றாலும் மற்ற யாரும் இப்படி ரகளை பண்ணியிருந்தால் கிழி கிழி என்று பீசாக்குகிற பேர்வழிகள் பேரன் பண்ணினதிலே தப்பு எதையும் கண்டு கொள்ளவேயில்லை. கர்ப்பிணி பெண் ஒருத்திக்கு ஒத்தாசை பண்ணப் போனாராம். பாவம் ரொம்ப இளகிய மனசு. அதனாலே தான் 'அடியாள்கள்' கூடவே போனாராக்கும்.

ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலேயும் அரசியல்வாதிகள் போய் கலாட்டா பண்ணி அங்கே உருப்படியா ஒன்றும் நடக்காமல் பண்ணுவதை விட வேறெதுவும் செய்து நாங்கள் கண்டதில்லை. தொண்டமானுக்கு வாரிசு தானே தான் என்று நிச்சயம் பண்ண வேண்டி தொழிலாளர் காங்கிரஸ் உள்ளே இவர் போடுகிற அட்டகாசம் ஊரறிந்த விவகாரம். அதில் கால்பங்கு பண்ணினாலே நாட்டில் உள்ள ஒரு அரசாங்க அலுவலகமும் தாங்காது.

ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரைக் கடத்திப்போய் உதைத்து மிரட்டினது பற்றி பேரனுடைய குண்டர் படை தருகிற சமூக சேவை விளக்கத்தையும் சரிநிகரில் எழுதுகிற கௌசீகன் நிசமாவே அவர்கள் ஆஸ்பத்திரி ஊழியருக்கு இரங்கி தமது வாகனத்தில் கொண்டு போனார்கள் என்று நம்புகிறாரா?

சிங்கள வைத்தியர்கள், தாதிகள்



எல்லாரும் சிங்கள இனவாத உணர்வு உள்ளவர்கள் என்று இந்த எழுத்தாளர் நம்புகிறாரா? அவர் சொல்கிற மாதிரியே மலையக மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்? இருக்கிற இனவாதத்தை மோசமாக்க அவருக்கு முடியும். அதைப் பாவித்து இன்னமும் கொஞ்சக் காலம் இனவாத அரசியல் பேசி பிழைப்பு நடத்த முடியும்.

தொண்டமானும் பேரனும் பண்ணுகிற தில்லுமுல்லு அரசியலை இதே சரிநிகர் கூட முன்பு சொல்லியிருக்கிறது. இப்போது இது ஒரு தமிழ் - சிங்களப் பிரச்சினையாகக் காட்டப்படுகிறதால் சிங்களவர்களுக்கு எதிராகச்செய்கிற எதுவுமே ஞாயம் ஆகிடுமா? இல்லாமல் போனால் இது தேர்தல் சமயத்தில் தொண்டமான் கட்சிக்கு கவிழாமல் முட்டுக் கொடுக்கிற ஒரு காரியமா?

-மலைச்சாமி-

### தொண்டமான் அண்ணாச்சி புதுத் தொண்டர் கிடைச்சாச்சி

தொண்டமானு அண்ணாச்சி -சபை
தேர்தல் காலம் வந்தாச்சி
ஒண்ணும் யோசனை பண்ணாமே - எது
பண்ணாக் கூட என்னாச்சி
வேண்டா வம்பு செஞ்சாலும் - அது
சரிக்கு நிகருன்னு கதை பண்ண
தொண்டர் ஒருத்தர் கெடச்சாச்சி - இனி
கவலெய வுடுங்க அண்ணாச்சி.

# வன்முறைக் கூண்டாய்

## வவுனியா வதையாவது ஏன்?

இனவாதம் என்ற ஓர் அற்பத்தனமான அரசியல் இடர்பாடுகளிற்குள் இழப்புக்களையும், துன்பங்களையும் சந்தித்து வருகின்ற தமிழ் மக்கள் நாலா பக்க இடிபாடுகளையும் சேர்த்தே அனுபவிக்க வேண்டிய நிலமை வேதனைக்குரியது.

இன்றைய சமூக, ஜனநாயக சக்திகளின் பலவீனங்கள் மக்களின் அமைதியை சீர்குலைக்க தலைப்பட்டுள்ளன. அன்று ஐரோப்பிய நாடுகளில் தாண்டவமாடிய பாசிசம் இன்று எமது நாட்டில் உள்ளூர் தலைமைத்துவ (முதலாளித்துவ) அரக்க சக்திகளினுடாக தலைதூக்குகின்றதென்பதனை மறுக்க முடியாத மூர்க்கத்தனமாக சில தமிழ்க் கட்சிகள் நிரூபிக்கின்றன. தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டத்தின் வாரிசுகளாக தம்மை வரித்துக் கொண்டு வலம் வரும் இவர்களால் சுய கௌரவத்தை தக்க வைத்துக் கொள்ள சுரண்டல்களே துணை போகின்றது.

ஓர் தேசி இனத்தின் விடுதலைக்கான போராட்டம் என்பது பொருளாதார சுரண்டல்களும், எதிர்சக்திகளுக்கெதிரான ஒடுக்குமுறைகளுமல்ல மாறாக மத, இன, பிற்போக்கு தனங்களுக்கெதிரான ஆத்மார்த்தமான, விலையிட முடியாத அர்ப்பணிப்புக்களை புரிகின்ற உண்மைநிலைவாதியே உண்மையான தேசியப் போராளி.

ஆனால் இக்கோட்பாட்டுப் பின்னணியில் தம்மை மறைத்துக் கொண்டு ஜனநாயக முலாம் பூசிய ஏகாதிபத்திய சிசுக்களாக வலம் வரும் இவர்கள் தமது வரலாற்றுக் கடமையை மறந்து ஏதோ ஏதோ செய்கின்றார்கள். தேசிய முத்திரையோடு இவர்கள் கட்சி அமைத்து பகிரங்க படுகொலைகளையும், சொத்து அபகரிப்புக்களையும் தான் அமைப்பு விதிகளாக சுவீகரித்துள்ளனர்.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இவர்களது தலைமைத்துவ தலைமீடு பண்டங்கள் மீது சுய ஆக்கிரமிப்பின் முனையாக வரிக் கலாச்சாரத்தை நியாயப்படுத்திக் கொண்டன. வவுனியா பிரதேச வாழ் மக்கள் முகங்களில் பீதி குடிகொண்டுள்ளது. அரசு கட்சிகளின் சுரண்டல்கள் ஒரு புறமும், தனிநபர்களது கூட்டாட்சி அமைப்பு மறுபுறமுமாக மக்கள் அமைதிக்கு திண்டாட வேண்டிய நிலை.

உள்மோதல்கள் வீதிக்குவர பொது மக்களின் உயிர்களும் பலிக்கடாவாகும் கோரத்தனத்தை எப்படி சகிப்பது. பெரும்பான்மை-சிறுபான்மை என மார்தட்டும் மனிதத்தை குறுப்பான்மை ஆக்கும் மனித தத்துவத்தை இவர்கள் ஆயுதம் நிரூபிக்குமானால் அவர் கரங்களில் கனம் எதற்கு?

இலங்கையில் பலதரப்பட்ட மக்களும் வேறுபாடற்ற ஒற்றுமையுடன் தான் வாழ்ந்து வருகின்றனர். தென்னிலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் வகுப்புவாத சக்திகளின் குழப்புநிலைகளால் அமைதிக்கு திண்டாட வேண்டியுள்ளது போன்றே ஒரு மேன்மைவாத தனம் தனிக்கட்சிகளின் ஊடாக வவுனியாவில் தாண்டவமாடுகிறது. ராணுவ தலைமீட்டால் இப்பிரச்சனைக்கு சுமூக தீர்வு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட போதும் பத்திரிகைகளில் கருத்து மோதல்கள், சீண்டல்கள். தாக்குதல்கள் ஓய்ந்த பாடில்லை.

எனவே பழைய நிலமை எப்போது தோன்றுமோ? என்ற அங்கலாப்புக்களை மக்களோடு மக்களாக இருந்து இத்தமிழ் கட்சிகள் புரிந்து கொள்ளுமா? நிட்சயம் அப்படியான சுமூகமான நிலை ஏற்பட இவர்கள் முன்வர வேண்டும். பாராபட்சம், பக்கசார்பு நிலைமைகளை களைத்தெறிந்து விட்டு நிற்கட்டும்.

அரசு கட்சிகளுக்கு துணை போகும் தனம், என்பதை விட உள்ளுக்குள்ளே மோதிக்கொள்வது எல்லோருக்கும் கேலித்தனம். இவற்றுக்கெல்லாம் பலிக்கடாவாய் வவுனியா வன்முறைக் கூண்டாய் வதைகின்றது.

– தேசாபிமானி –

# என்.ஜி.ஓ. தனம்

சரிநிகர் என்.ஜீ.ஓ. 'தனத்தில்' நடத்தப்படுகிற பத்திரிகையானாலும் அது என்.ஜீ.ஓ. தனமான பத்திரிகை இல்லையாம். பல வருடங்களின் முன்பு ஒரு முறை தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதியைப் பற்றி "முதல்வர் சாமான்யர் என்றாலும் சாதாரணமானவர் அல்ல" என்று ஒரு ஆதரவாளர் சொன்னது மாதிரி என்று வைத்துக்கொள்வோம். சரிநிகரை என்.ஜீ.ஓ. பணத்தில் நடக்கிற ஏடு என்று புதிய பூமியில் குறிப்பிட்டது தவறாம். என்ன மாதிரித் தவறென்று தெரியுமா? சீ.ஐ.ஏ. ஏஜன்ட், திரிபுவாதி என்று எவரையேன் ஏசுகிறமாதிரியான தவறாம்.

திரிபுவாதி ஒரு சின்னப் பிரச்சினை. சீ.ஐ.ஏ. ஏஜன்ட், இல்லாதவனை சீ.ஐ.ஏ, திரிபுவாதி என்று சொன்னால் பிழை. என்.ஜீ.ஒ. பணத்தில் நடக்கிற பத்திரிகையை என்.ஜீ.ஓ. பணத்தில் நடக்கிற பத்திரிகை என்று சொல்கிறது எப்படிப் பிழையாகும்? ஆனால் யார் என்ன சொன்னாலும் அது பிழைதானாம். ஏனென்றால் சரிநிகரிடம் என்.ஜீ.ஓ. தனம் இல்லையாம்.

என்.ஜீ.ஓ. தனம் என்றால் கூடாத விடயம் என்பதை அவர்களும் தெரிந்து வைத்திருக்கிறது சந்தோசமான புதினம் தான். இலங்கையில் என்.ஜீ.ஓ. பிதாமகர் சார்ளி அபேசேகரா. அவர் என்.ஜீ.ஓ. காசிறைத்து வளர்த்த மரம் மேஜ், நாய் விற்ற காசு குரையாது என்கிற தைரியம் சிலருக்கு.

சரிநிகரிடம் என்.ஜீ.ஓ. தனம் இருக்கிறதோ இல்லையோ என்று நாங்கள் ஆராய்கிறதை விட என்.ஜீ.ஓ காசிலும் அரசாங்க எடுபிடிக் கட்சி தருமத்திலும் பத்திரிகைகள் சிலது செய்கிற அதே வேலைகளை சரிநிகர் செய்கிறது தான் எங்களுடைய கவனத்துக்கான விடயம்.

புதிய ஜனநாயகக் கட்சிக்கும் புதிய இடதுசாரி முன்னணிக்கும் இதுவரை சரிநிகர் காட்டி வந்திருக்கிற 'மரியாதையைப்' பற்றிப் புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. மார்க்சிசத்தையும் புதிய ஜனநாயகக் கட்சியையும் தாக்குகிற சிலர் புனைபேரில் சரிநிகரில் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அவதூறுகளை எல்லாம் புதியபூமி பல காலமாகப் பொறுத்துத்தான் இருந்தது. புனைபேரில் எழுதுகிறவர்களைப் பாதுகாக்க சரிநிகர் விரும்பினால் போகட்டும். புனைபேரில் வருகிற எல்லா எழுத்துக்களுக்கும் அது பொறுப்பேற்குமா? புனைபேர் பற்றிப் புதிய பூமியின் நிலைப்பாட்டுக்கும் சரிநிகரின் நிலைப்பாட்டுக்கும் இதுதான் வித்தியாசம்.

பல தனிப்பட்டவர்கள் சரிநிகரில் வீணான அவதூறுக்கு ஆளாகி இருக்கிறார்கள். பல சமயங்களில் அவர்கள் அதை அறியவும் மாட்டார்கள். போன மாதமும் காலஞ்சென்ற திரு.ஜேம்ஸ் ரட்ணமும், அவுஸ்திரேலியாவிலுள்ள பேராசிரியர் இந்திரபாலாவும் மிகவும் கேவலமான முறையில் தாக்கப்பட்டிருந்தார்கள். ஆண்ட பரம்பரைக் கண்ணோட்டத்தில் அகழ்வாராய்ச்சியை நடத்தாத குற்றத்துக்கு பேராசிரியர் இந்திரபாலா ஏசப்பட்டு இருக்கிறார். சகட்டுமேனிக்கு பேராசிரியர் கைலாசபதியும் வம்புக்கு இழுக்கப்பட்டிருக்கிறார். இது சிறு பிள்ளைத்தனமா, என்.ஜீ.ஓ. தனமா?

சரிநிகர் என்.ஜீ.ஓ. காசில் ஓடுகிற உண்மையைச் சொன்னது பற்றி இவ்வளவு கோவித்துக் கொள்ளுகிற சரிநிகர் தன்னைக் கவிழ்க்க வேலை செய்து வந்து இன்னமும் கவிழ்க்கக் காத்திருக்கிறவர்களான யூ.ரி.எச்.ஆர். (ஜே.) என்கிற 'அமைப்பைப்' பற்றிக் கொஞ்சக்காலமாக மோனங் காக்கிற மருமம் என்ன?

சரிநிகரில் புதியபூமியைத் தாக்கி எழுத முன்பு, சரிநிகர் ஆசிரியர் குழுவில் ஒருவர் தாங்கள் ஒரு நேச சக்தி என்று புதியபூமிக்கு நேச எச்சரிக்கை செய்திருந்தார். சரிநிகர் எந்த வகையில் நேச சக்தியாக நடந்து வருகிறது என்று சரிநிகரை வாசிக்கிறவர்கள் அறிவார்கள்.

ஜே.விபிக்கு சரிநிகர் காட்டுகிற நேசம் நாம் அறிந்தது. இப்போது தொண்டமானின் பேரனின் குண்டமான்கள் மீதும் சரிநிகர் நேசம் காட்டியிருக்கிறது. சிலகாலத்துக்கு முன்னம், மலையகத்தில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகிற ஒரு என்.ஜீ.ஓ. குழுவுக்கும் நேசம் காட்டியிருக்கிறது. இன்னும் மார்க்சிசக் கட்சிகளுக்கு எதிராக மார்க்சிச வேடம் பூணுகிற உதிரிகள்பலபேருக்கும் சரிநிகர் நேசம் காட்டியிருக்கிறது. நாட்டின் தமிழ்ப் பேசும் தேசிய இனங்கள் மத்தியில் இயங்குகிற ஒரே மார்க்சிய லெனினிசக் கட்சியை மட்டம் தட்டுகிற பேர்வழிகளிடம் காட்டுகிற நேசம் அந்தக்கட்சியின் மேல் என்றாவது காட்டப்பட்டதா?

சரிநிகர் புதியபூமிக்கு நண்பன் என்று நாம் நம்ப இன்னும் இடம் இல்லை. அதனால் அது எங்களுக்கு எதிரியாகி விடாது. யாரென்றாலும் வலிந்து எங்கள் பத்திரிகையின் மீதோ புதிய இடதுசாரி முன்னணியின் மீதோ புதிய ஜனநாயகக் கட்சியின் மீதோ மார்க்சியத்தின் மீதோ தாக்குதல் தொடுத்துவிட்டு நம்மைப் பேசாமலிருக்கும்படி எதிர்பார்க்க முடியாது.

தேசிய இனங்களிடையிலான சமத்துவத்துக்கும் சுயநிர்ணய உரிமைக்குப் போராடுவதற்கும், குறுகிய தேசியவாதத்தின் வேறுபட்ட முகங்களிடையிலான விவாதத்தை மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சனையாக முன்வைப்பதற்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. சரிநிகர் இந்த எல்லையை என்றாவது தாண்டும் என்ற நம்பிக்கை அண்மைக்காலமாகச் சிதைந்தே வருகிறது. சரிநிகரில் உள்ள தனிமனிதர்கள் மீதான தனிப்பட்ட விமர்சனமாக நாங்கள் இதை முன்வைக்கவில்லை. சரிநிகர் ஒரு அமைப்பு என்ற வகையில் நடக்கிற விதம் பற்றி நாங்கள் பேசாமல் இருக்கவும் முடியாது. தெரிவு சரிநிகருடையது.

நன்றி - நூலகத்திட்டம்



## அழிவுக்கு ஒரு கண்காட்சி

உலகில் பலவேறு வகைப்பட்ட கண்காட்சிகள் காலத்திற்குக் காலம் நடாத்தப்படுவது வழக்கம். தமது திறமைகளின் மூலம் மனிதர் உருவாக்கும் படைப்புக்களை கண்காட்சிகள் மூலம் வெளிப் படுத்துவர். அவற்றில் மனிதர்களது ஆக்கபூர்வமான திறமைகள் வெளிக் கொணரப் படுவதுடன் அவற்றை மக்கள் வாங்கி தமது தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் இத்தகைய கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. விவசாய உற்பத்தி கண்காட்சி, கைப்பொருட்கள் கண்காட்சி, ஆடை வகைக் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி, புகைப்படம்–ஓவியக் கண்காட்சி நவீன தொழில்நுட்ப உற்பத்திப் பொருள் கண்காட்சி என்பன உதாரணங்களாகும்.

ஆனால் மக்களை அழிவுக்கு உள்ளாக்கும் பொருட்களுக்கு கண்காட்சி வைப்பது தற்போது அறிமுகமாகி உள்ளது. இது ஆயுதக் கண்காட்சியாக தற்போது நடாத்தப்படுகிறது. மத்திய கிழக்கின் ஐக்கிய அரபு இராச்சியத்தில் "சர்வதேச பாதுகாப்பும் கண்காட்சியும் மாநாடு–1999" என்னும் பெயரில் இக் கண்காட்சி நடாத்தப்படுகிறது. ஆகப் பிந்திய நவீன ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் என்பன வைக்கப் பட்டுள்ளதுடன் அவற்றை இயக்கிக் காட்டும் பயிற்சிகளும் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. நவீன நீர்மூழ்கிகள், கவச வாகனங்கள், டாங்கிகள், போர் விமானங்கள் என்பன இதில் இடம் பெறுகின்றன.

இந்த ஆயுதக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு உலகின் பல நாடுகளில் இருந்து இராணுவ அதிகாரிகள், ராஜதந்திரிகள் சென்றுள்ளனர். அத்துடன் உலகின் ஆயுத வியாபாரிகள் இக் கண்காட்சிக்கு படையெடுத்துள்ளனர். நமது நாட்டில் இருந்து மூன்று உயர்நிலை ராணுவ அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் சில உள்ளூர் ஆயுத விற்பனைத் தரகர்களும் சென்றுள்ளதாக அறிய முடிகிறது.

இந்தக் கண்காட்சியின் பின்னால் இருப்பவர்கள் ஆயுத உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஏகாதிபத்திய பிற்போக்கு நாடுகளேயாகும். ஆயுத வியாபாரத்தில் கொள்ளை லாபம் பெற்று வரும் இவர்களுக்கு உலகில் யுத்தங்கள் நடத்தே ஆக வேண்டும். இது வரை ஆக்கத்திற்கும் மக்கள் நல்வாழ்வுக்குமே கண்காட்சிகள் நடாத்தப் பட்டு வந்தன. இப்போது மக்களை அழிவுகளுக்கு உள்ளாக்குவதான ஆயுதக் கண்காட்சி நடாத்தப்படும் அவல நிலை தோன்றியுள்ளது. நாளை போதைவஸ்து கண்காட்சி நடத்தப்பட்டால் கூட ஆச்சரியம் கொள்ளத் தேவை இல்லை. ஏனெனில் ஏகாதிபத்தியவாதிகள் எதைச் செய்தாலும் அதை ஆதரிக்கவும் நியாயப்படுத்தவும் உலகில் ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது.

## பொருளாதாரத்திற்கு நோபல் பரிசு

## அமார்த்ய ஸேன் : பரிசின் மறுபக்கம்

அமார்த்ய ஸேன் என்ற இந்தியருக்கு நோபல் பரிசு கிடைத்தது பற்றி இந்தியாவில் மிகவும் பெருமை பாராட்டப்பட்டது. பொருளியலில் அப் பரிசைப் பெற்ற முதல் இந்தியர் அவரே. அது மட்டுமின்றி வலதுசாரிப் பொருளியல் நிபுணர்கள் பெற்று வந்த ஒரு பரிசைச் சீர்திருத்தவாதியான ஒருவர் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அவர் எளிமையான மனிதர். பரிசு பெற்ற மற்றப் பொருளாதர மேதைகள் போலல்லாமல் ஏழைகள் பற்றியும் ஏழை நாடுகள் பற்றியும் அனுதாபம் உடையவர். முன்பு தீவிர இடதுசாரியோ என இந்திரா ஆட்சிக் காலத்திற் சந்தேகிக்கப்பட்டவர். சிறிது இடதுசாரி அனுதாபமும் உடையவர். அனைத்தினும் முக்கியமாக, இங்கிலாந்தில் வாழ்ந்தாலும் இன்னமும் இந்தியக் குடிமகனாகவே உள்ளவர்.

ஸேனுக்குக் கிடைத்த பரி அவரது திறமைக்கும் உழைப்புக்கும் கிடைத்த பரிசு என்பது பற்றி நமக்கு எதுவித மறுப்புமில்லை. ஆயினும் அந்தப் பரிசு கிடைக்க இவ்வளவு காலமானது ஏன் என்பது ஒரு கேள்வி. மற்றது எப்படி ஒரு சீர்திருத்தவாதிக்கு இப்பரிசு கிடைத்தது என்ற கேள்வி.

ஸேனுடைய மனிதாபிமானப் பொருளாதாரம் அடிப்படையான மாற்றத்துக்கான ஒன்றல்ல பொருளாதார விருத்தி பற்றிய அவரது பர்வையில் சமூகத்திற் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மக்களது உழைப்பாற்றலைப் பயனுள்ளதாக்கி அவர்களது வாழ்வைப் பொருளுள்ளதாக்க வேண்டும். ஆயினும் ஒடுக்கப்பட்ட மக்களிட்ம் பொருளாதார அரசியல் அதிகாரம் கைமாற வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அவருக்குப் பரிசு கிடைத்திருக்காது.

வலதுசாரிப் பொருளாதார ஆய்வாளர்களது ஆரூடங்கள் எல்லாமே பொய்யாகிப் போன்கின்ற ஒரு நிலையில் ஒரு சீர்த்திருத்தவாதிக்கு அப்பரிசை வழங்கியதன் மூலம் நொபெல் பரிசுக் குழு தனது போக்கை மாற்றிக் கொள்ளுமென எதிர்பார்பதற்கு அவசியமில்லை. இன்று மூன்றாமுலகின் பொருளாதாரங்கள் யாவும் உலகமயமாதலின் சுமையின் கீழ் தடுமாறின் கவிழ்ந்துள்ளன. இச்சுழலில் மூன்றாம் உலகின் பொரளாதார நெருக்கடிக்கு வலதுசாரித் தீர்வுகளால் பயனில்லை. ஒரு மாக்ஸியத் தீர்வை மக்கள் வெகுவிரைவிலேயே தேடிக் கொள்வதற்கு முன்னால் ஒரு சீர்திருத்தத் தீர்வுக்கு வழங்கும் அங்கிகாரத்தின் மூலம் நொபெல் பரிசுக் குழு முதலாளித் தந்திரோபாயம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இன்று வரை ஒரு மாக்ஸியப் பொருளியலாளரும் ஏன் நொபெல் பரிசு பெறவில்லை என்ற கேள்விக்குப் பதிலை நாம் அறிவதில் சிரமம் இல்லை. இலக்கிய, சமாதான, பொருளியல் துறையில் சகல பரிசுகளும் எசமான வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் முறையில் தான் வழங்கப்படுகின்றன. அதை மூடிமறைப்பதற்காக நல்லவர்கட்கும் இடையிடையே பரிசுகள் கடைப்பதுண்டு. ஸேனுக்குக் கிடைத்த பரிசில் சிறிது இதிலும் சிறிது அதிலும் சேரும்.

### சாதிய ஒழிப்பும்......

5ம் பக்க தொடர்ச்சி

சாதியத்தின் வேகமும் தீண்டாமையின் நடைமுறையும் குறிப்பாக வடபகுதித் தமிழர்களிடையே தான் இறுக்கமானதாக இருந்து வந்துள்ளது. குறிப்பாக பொது இடங்களில் சாதி பார்ப்பதும் தீண்டாமை பாராட்டுவதுமான அநீதிக்கு எதிராக காலத்திற்குக் காலம் பலவேறு இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள போதிலும் 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி தோற்றுவித்து முன்னெடுத்த பரந்த புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் மூலம் சாதியத்தின் இறுக்கமும் தீண்டாமையின் பாகுபாடும் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

அன்றைய போராட்டங்கள் தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கடுமையான போராட்டங்களைச் சந்திக்க நேரிட்டது. தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம், மு.கார்த்திகேசன், டாக்டர் சு.வே.சீனிவாசகம் போன்ற தலைவர்களின் வழிகாட்டலில் வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை சரியான வர்க்கப் போராட்டப்பாதையில் முன்னெடுத்தது.

அத்தகைய போராட்டத்திற்கு ஒரு பரந்த ஐக்கிய முன்னணி அமைப்பின் அவசியம் தேவைப்பட்டது. அதனை நிறைவு செய்வதற்காகவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அவ் வேளை அதற்குத் தகுதியான ஒரு தலைவராக எஸ்.ரி.என்.நாகரட்ணம் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடுமையான போராட்டத் தருணத்தில் பொறுப்பு மிக்க வெகுஜன இயக்கத் தலைமைத்துவத்தை துணிவுடன் ஏற்று இறுதிவரை நேர்மையுடன் செயல் புரிந்தவர் தோழர் எஸ்.ரி.என். ஆவார்.

அவரது ஆற்றல், துணிவு, சாதியத்தின் மீதான வன்மம் ஒடுக்கப்பட்டு நிற்கும் மக்களது வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்னும் தாகம் என்பன அவரை நிதானமாக வழிநடக்கச் செய்தது. எஸ்.ரி.என். எச்சந்தர்ப்பத்திலும் தனி முடிவுகளுக்குப் பதிலாக கூட்டு முடிவுகளுக்கே முதன்மை கொடுத்து செயல்பட்டார். அதனால் அவரது தலைமைத்துவம் உரிய இடங்களில் உரியவாறு உரிமைகோரி நின்ற மக்களின் ஒவ்வொரு வெற்றிக்கும் சாதகமாக அமைந்தது கொண்டது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி சாதிய தீண்டாமையை எதிர்த்து நின்ற சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அரவணைத்து குறுகிய சாதி வாதத்திற்கு அப்பால் சமூக விடுதலை என்னும் குறிக்கோளுடன் செயல்பட்டவர் தோழர் எஸ்.ரி.என். என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1966–72 காலகட்டத்தில் எஸ்.ரி.என். என்னும் பெயர் சாதிய தீண்டாமைக்கு எதிராகப் போராடிய மக்களது உரிமைப் போராட்டத்தின் ஓர் அழுத்தமான அடையாள சின்னமாகவே காணப்பட்டது.

அத்தகைய ஒரு முன்னுதாரணம் மிக்க தலைமைத்துவம் வழங்கி தியாக உணர்வுடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கு தலைமை தாங்கி நின்ற தோழர் எஸ்.ரி.என். மறைவின் 10வது ஆண்டு நினைவை இவ் வேளை மக்களுடன் இணைந்து நினைவு கூர்வதில் மன நிறைவு கொள்வோமாக. அவரது மறைவு தினம் 28–02–89 ஆகும். அவரது நாமம் என்றும் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கும்.

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்

## 25 ஆண்டு நிறைவு

தேசிய கலை இலக்கியப் பேரவை தனது கலை இலக்கியப் பயணத்தில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. அதன் குறிக்கோள் மக்கள் இலக்கியக் கோட்பாட்டை முன்னெடுத்து செல்வதாகும். புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய கலாச்சாரம் என்பனவற்றை தோற்றுவிக்கும் சமூக மாற்றத்திற்கான போராட்டப்பாதையில் தேசிய கலை இலக்கியப் பேரவை தன் பணி ஆற்றி வந்துள்ளது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தனிமனித விருப்புவெறுப்பின்றி கூட்டுச் செயல் பாடாக கலை இலக்கியப் பணியினை மேற்கொண்டு வந்துள்ளது. பல்வேறு நெருக் கடிகள் மத்தியிலும் யாழ்ப்பாணத் திலிருந்து, தாயகம் இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வருகிறது. அத்துடன் 75க்கு மேற்பட்ட கலை இலக்கிய நூல்களை தனது வெளியீடுகளாக வெளியிட்டுள்ளதுடன் தமிழகத்தில் அவற்றை வெளியீடு செய்ததன் மூலம் ஈழத்து எழுத்தாளர்களை அங்கு அறிமுகம் செய்தும் வந்துள்ளது.

இன்றுவரை நூற்றுக்கு மேற்பட்ட கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், நாடக அரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் வாழும் சகல பிரதேசங்களில் நெருக்கடிகள், இனவன் முறைகள், தேசிய இனவிடுதலைப் போராட்டம் என்பன தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த சூழலில் இருபத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்தும் பன்முக செயற்பாடுகளில் தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வடபிரதேசம், மலையகம், கொழும்பு, வவுனியா பகுதிகளில் தேசிய கலை இலக்கியப் பேரவை விரிவானதும் காத்திரமானதுமான கலை இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளமை கவனத்திற் குரியதாகும்.

இவ் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை யொட்டிய நிகழ்ச்சிகள் கொழும்பு, மலையகம், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் நடாத்த ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன. ஆய்வரங்குகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள் என்பன இடம் பெற்று வருகின்றன. கொழும்பில் இரண்டு நாள் ஆய்வரங்குத் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே மாதத்தில் கொழும்பில் கலை விழாவும் விஷேட மலராக வெளிவர உள்ளது. மலையகத்தில் இரண்டு நாள் ஆய்வரங்கும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

## மக்கள் ஆத்திசூடி

### (காப்பு - பிரபஞ்ச வாழ்த்து)

*ஆத்திசூடி, நீலக் கடல் உடுத்தி,*  
*வானத்திருக்கும் முழுவெளி மேனியாள்,*  
*கரு நிற நீக்ரோ ஆபிரிக்கம் நிறைவோன்,*  
*அரபு நிலமெங்கும் ஆர்த்தெழ நடப்போன்,*  
*லத்தீன் அமெரிக்கம், எனப்பலநாடுகள் மனிதர்*  
*வேறுபாடுணர்ந்தும் வீறுடன் எழுந்து*  
*சூரியன், சந்திரன், விண்வெளி மீன்கள்*  
*யாவும் ஒன்றே, அதனிலை ஒளியின் வேகம் கொள்வோம்,*  
*பிரபஞ்ச உலகின் பிணிகளை வெல்வோம்,*  
*சர்வமும் எங்கள் உலகெனக் கொள்வோம்.*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அரசியல் செய்,  
ஆய்வு செயப் பழகு,  
இன்பமாய் வாழ்,  
ஈவிரக்கம் கொள்,  
உண்மையைத் தேடு,  
ஊரை விரும்பு,  
எல்லோரையும் நேசி,  
ஏற்றம் பெறு,  
ஐக்கியம் பேண்,  
ஒன்று பட்டுழை,  
ஒருலகம் காண்,

**-பாரதி பக்தன்-**



## "தாயகம்" விற்பனையாகிறது.

தேசிய கலை இலக்கிய சஞ்சிகையான 'தாயகம்' தை–1999 இதழ் வெளிவந்துவிட்டது. கலை இலக்கிய ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி வெளிவந்துள்ள தாயகம் சஞ்சிகை கொழும்பு யாழ்ப்பாணம், மலையகம், வவுனியா பிரதேசங்களில் விற்பனையாகின்றது. **வசந்தம் யாழ்ப்பாணம்.**

**சவுத் ஏசியன் புக்ஸ்**  
**5-44, 3வது மாடி,**  
**கொ.ம.ச.தொகுதி,**  
**கொழும்பு-11.**

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
PUTHIYA POOMI
පුදියපූමි
சுற்று 06 மார்ச் 1999 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 27

## அமெரிக்கச் சிறைச்சாலைகளில்

- ✤ 1998 யூன் 30ல் அமெரிக்க சிறைச்சாலைகளில் இருந்த கைதிகள் 18இலட்சம்.
- ✤ அமெரிக்க நீதித் திணைக்களத்தின் தகவல்படி 150 அமெரிக்கரில் ஒருவர் சிறையில்.
- ✤ முன்னைய ஆண்டைவிட இது 4.4% அதிகம் - அதாவது 76700 அதிகம்.
- ✤ கைதிகளில் 41% வெள்ளையர் 41% ஆபிரிக்க அமெரிக்கர் 16% ஹிஸ்பானியர் 2% ஏனையோர்.
- ✤ ஆகக் கூடிய கைதிகள் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ளனர். அங்கு 21,000 பேர் உள்ளனர்.
- ✤ நியூயோக் நகரின் சிறைச்சாலைகளில் 17,700 பேர் உள்ளனர்.
- ✤ இவர்களில் பெண் சிறைக் கைதிகள் 1லட்சத்து 48ஆயிரம் பேர்.

# ஒரு பேரினவாத ராணுவ விஸ்தரிப்பு!

1960களின் ஆரம்பத்தில் பாலாலியில் விமானத்தளத்திற்கு அருகாக சிறிய ராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்ட காரணம் கள்ளக் கடத்தலைக் கண்காணிப்பதற்கான கரையோரப் பாதுகாப்பு என்பதாகும். ஆனால் காலப் போக்கில் அது விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப் பட்டது. இன்று வடபகுதிக்கான பிரதான தலைமைத் தளமாகவும் இலங்கையின் முக்கிய தளங்களில் ஒன்றாகவும் மாற்றப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டுக்குப் பின் பலாலி இராணுவத் தளத்தை சுற்றியுள்ள பரந்த நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். கிழக்கே அச்சுவேலி எல்லை வரையும் தெற்கே புன்னாலைக் கட்டுவன் குரும்பசிட்டி குப்பிளான் வரை தென்மேற்கே தெல்லிப்பளை தொட்டு மேற்கே கீரிமலை மாதகல் வரையாகவும் உள்ளே மாவிட்டபுரம் காங்கேசன்துறை, மயிட்டி, பலாலி கிழக்கு வரையான நீண்டு அகன்ற பிரதேசம் ராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. அதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வீடுகள் – சீமெந்து தொழிற்சாலை உட்பட பெரும் பெரும் பாடசாலைகள் கோவில்கள் தெலிப்பளை வைத்தியசாலை போன்ற சகலவற்றையும் இழந்து இடம் பெயர்ந்து ஏதிலிகள் ஆனார்கள். இன்றுவரை அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப அனுமதிக்கப்படவில்லை. காங்கேசன்துறைமுகத்தில் கப்பல் ஏறுவதும் பலாலி விமான நிலையத்தில் விமானத்திலிருந்து இறங்குவதும் ஏராளம் ராணுவக் கட்டுப்பாடுகளுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாகியே யாகும். அவர்களது வாகனங்கள் மூலமாகக் கொண்டு வரப்பட்டு நில் என்ற இடத்தில் நின்று இரு என்ற இடத்தில் இருந்து ஏறு என்னும் போது ஏறி இறங்கு எனக் கூறும் போது இறங்குவதாகவே பலாலி, காங்கேசன்துறை ஊடான பயணம் இருந்து வருகிறது.

இந்நிலையிலேதான் தற்போது பலாலி இராணுவத் தளத்தை விரிவாக்கி விஸ்தரிப்பதற்காக பன்னீராயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலங்களை இராணுவம் சுவீகரிக்க திட்டமிட்டுள்ளது என்ற செய்தி வெளிவந்துள்ளது. இதற்கான சகல முயற்சிகளும் வேகமாக நடைபெற்று வருவதாகவும் அறிய முடிகிறது. இந்நடவடிக்கை மிகச் சாதாரண விடயமல்ல. பேரினவாத உள்நோக்கத்தை நடைமுறைப் படுத்தும் ராணுவ விஸ்தரிப்பு வாதமேயாகும். இனப்பிரச்சினைக் கான தீர்வு வெறும் ஏமாற்று வேலை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஒரு புறத்தால் பேரினவாத விஸ்தரிப்பு நடைபெறுகிறது. மறுபுறத்தில் பன்னீராயிரம் ஏக்கர் நில அபகரிப்பின் மூலம் கட்டியெழுப்பப்படும் தளம் நிச்சயம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர்காலத் தேவைக்கானதாகவே இருக்கப்போகிறது. எவ்வாறு பலாலி விமான நிலையம் இன்று ராணுவ விமான நிலையமாக மாற்றப்பட்டதோ அதுவே நாளை சர்வதேச ராணுவ விமானத்தளமாகவும் மாற்றப்படும் என்பதில் ஐயமில்லை. இவையாவும் பாரிய ராணுவத்தளமாக பலாலி மாற்றப்படுவதன் அடுத்த கட்ட நடவடிக்கையைத்தான் காணிச் சுவீகரிப்பு எடுத்துக் காட்டுகிறது. ஏற்கனவே திருகோணமலையில் லிங்கநகர்ப் பகுதியில் இத்தகைய நிலச் சுவீகரிப்புக்கு ராணுவம் அறிவித்தல் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு வடக்கு கிழக்கின் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ராணுவ விஸ்தரிப்புடன் பேரினவாதத்தால் விழுங்கப் படுவது தொடரும் நடவடிக்கைகளாகி வருகின்றன. இவற்றுக் கெதிரான மக்கள் இயக்கங்களைக் கட்டியெழுப்பி முன்னெடுக்க வேண்டியது இன்றைய அவசியத் தேவையாகும்.

## பிரசார பயமுறுத்தல்

- ☞ இ.தொ.கா வினரை விட வேறு யாரும் ஓட்டு கேட்க வந்தால் ஒரு கையில் அரிவாளையும், மறு கையில் விளக்குமாறையும் எடுத்துக் கொண்டு அரிவாளால் வெட்டி, விளக்குமாத்தால் அடித்து அனுப்புங்கள்.
- ☞ மயில் இப்ப இ.தொ.கா வின் சின்னம் அதற்கு ஓட்டுப் போடலைன்னா நாடெங்கும் இருக்கிற இ.தொ.கா. காரியாலயங்களை எல்லாம் 10 வருடங்களுக்கு மூடிவிடுவோம். இ.தொ.கா அயிடின்டி கார்ட் இல்லாம ஒருத்தரையும் நடமாட விடமாட்டோம்.
- ☞ இ.தொ.கா அபேட்சகர்கள் தோல்வியடைந்தால் தோல்வி யடைந்த அபேட்சகர்களும், அப்பகுதி இ.தொ.கா காரியாலய பிரதிநிதிகளும் தோட்டக்கமிட்டி தலைவர்களும் என் முகத்தில் முழிக்கக்கூடாது.

  **- ஆறுமுகம் தொண்டமான்**
- ☞ மயில் சின்னத்துக்கு பக்கத்தில் வேறு ஏதாவது சின்னம் வரையப்படுமானால் அக்கட்சிக் காரரின் கை இருக்க வேண்டிய இடத்தில் இருக்காது.

  **- ஒரு அபேட்சகர்**
- ☞ மயிலுக்கு எதிராக வேலை செய்யிறவங்களை 'புலியின்னு' புடிச்சிக் கொடுத்திற வேண்டியதுதான்.

  **- ஒரு எம்.பி**
- ☞ கொஞ்ச மாஸ்டர்மார் மயிலுக்கு எதிராக வேலைசெய்யிறாங்க அவிங்களுக்கு பனிஸ்மென்ட் டிரான்ஸ்பர் கொடுத்திட வேண்டியதுதான். அப்புறம் ஆளுங்களே அடிச்சி துரத்திடுவாங்க.

  **- ஒரு எம்.பி**

## மாகாணசபையில் கயிறு இழுத்தல்

நுவரேலியா மாவட்டத்தில் மாகாணசபை தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன. இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற பேரில் இ.தொ.கா உட்பட சகல கையாலாகாத தொழிற்சங்கங்கள் அனைத்தும் கூடியிருந்தாலும் இந்திய வம்சாவளி பேரணி என்ற வேஷத்தை கண்டு ஏமாந்துவிட தயாரில்லை என்பதை மலையகத் தமிழ் மக்கள் எடுத்துக் கூறிவருகின்றனர். இ.தொ.கா எம்.பிக்களும் வேட்பாளர்களும் தோட்டங்களுக்குள் பிரவேசிக்க முடியாத நிலை காணப்படுகிறது. வலப்பனை தொகுதியில் பல தோட்டங்களுக்குள் தொழிலாளர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

சில இடங்களில் தொழிலாளர்களின் எதிர்ப்புகளையும் மீறி தங்களது சொல்வாக்கையும் பணபலத்தையும், பாதுகாப்பு பலத்தையும் வைத்துக் கொண்டு சென்றபோதும் அவர்களை வரவேற்கவோ, அவர் களின் வாக்குறுதிகளை கேட்கவோ மக்கள் கூடியிருக்க வில்லை. தலைவர் களும் அபேட்சகர்களும் சென்ற வாறே திரும்பிச் சென்றுள்ளனர்.

சில தோட்டங்களில் அபேட்சகர் களை கேள்வி மேல் கேள்வி கேட்டு தொழிலாளர்கள் திருப்பி வழியனுப்பி யுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அபேட்சகர்களும், தலைவர்களும் மக்களை திட்டித்தீர்த்துவிட்டு திரும்பியுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி அபேட்சகர்களும் ஹைபாராஸ்ட்டில் சில தோட்டங்களில் மக்களின் மேற்படி உபசாரத்திற்குள்ளாகி யிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அம்மாவட்டத்திலுள்ள எல்லா தோட்டங்களின் பெயர் விபரங் களையும் கம்பியூட்டரில் தட்டச்சு செய்து வைத்துக் கொண்டு அத்தோட்டங்களுக் கெல்லாம் மின்சாரம் வழங்க ஏற்பாடுகளை செய்திருப்பதாக இ.தொ.கா வினரும், ம.ம.முன்னணி யினரும் மக்களிடம் கூறிவருகின்றனர்.

இவ்வாறு தொழிற்சங்கத் தலைவர் களுக்கும் மலையக மக்களுக்கு மிடையில் கயிறு இழுத்தல் நடை பெறுகிறது. இதில் எல்லாவிதமான சதிகளையும் செய்து தொழிற்சங்கத் தலைவர்கள் வெற்றிபெறுவதற்கே முயற்சிக் கின்றனர்.

**இந்திய வம்சாவழி....**

1ம் பக்க தொடர்ச்சி..

.இரத்தினபுரி வேவல்வத்தையில், பசறையில் இடம் பெற்ற பேரினவாத – தொழிலாளர் விரோத தாக்குதல் களுக்கு ஆகக் குறைந்தது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தையாவது நடாத்தி ஒன்றுமையை வெளிப்படுத்தி யிருக்கலாம். கிராம சேவையாளர் நியமனம், லிகிதர் நியமனம் போன்றவற்றை இழுத்தடித்துச் செல்வதற்கு எதிராக ஒன்று பட்டவர்கள் எனக் கூறிக் கொள்ளும் பேரணியினர் ஏதாவது நடைமுறை இயக்கத்தை நடாத்தி இருக்கலாம், சிறையில் வாடும் மலையகத் தமிழ் இளைஞர்கள் பற்றி வாயே திறக்காத பேரணியினர் மாகாணசபைத் தேர்தலில் தங்களைப் பலப்படுத்த வாக்களிக்க வேண்டுமாம்.

மலையகத்தில் பேரணி என்னும் பெயரில் இணைந்து நிற்போர் யார்? தனது குடும்ப வாரிசுக்கு முடி சூட்டி விட்டுச் செல்வதற்கு துடிதுடித்து நிற்கும் தொண்டமான் அவரது ஆண்டபரம்பரை ஆதிக்கத்தைத் தொடர்வதற்கு கூட்டாளிகள் தேடினார். இதோ உங்கள் காலடியில் சரணம் என ஓடுகாலிகளான குட்டிச் சங்கக்காரர்கள் ஓடிச் சென்று காலில் வீழ்ந்தார்கள். தொண்டமானின் துரோகத்தனத்தை எதிர்த்தே அன்று வெள்ளையன் அவர்கள் தனித் தொழிற்சங்கத்தை ஆரம்பித்து சி.வி.வேலுப்பிள்ளை போன்ற நேர்மைமிகு தொழிற்சங்க வாதிகளின் ஒத்துழைப்போடு முன்சென்றார். இன்று அச்சங்கத்தின் தலைவர்களான அய்யாத்துரையும், கந்தையாவும் தமது தலைவரான வெள்ளையனின் நிலைப்பாட்டிற்கு துரோகம் செய்து விட்டு மீண்டும் தொண்டமானிடம் சரணடைந்து விட்டார்கள்.

மலையகத்தில் புரட்சிகர எழுச்சி யைத் தோற்றுவித்த வரலாற்று புகழ்மிக்க செங்கொடிச் சங்கத்தை சுயநலச் சாக்கடையில் அமிழ்த்தி விட்டு ஓ.ஏ.இராமையா இன்று தொண்டமானின் புதிய கூடாரத்தில் புகுந்து சல்லாபம் புரிகிறார். கீழ்த்தரமான பிரதேசவாதமும் மாக்சிச விரோதக் கருத்துக்களும் பரப்பி தொண்டமான் கூட்டத்தை மகிழ்விப்பதில் முன்நிற்கிறார். இவ்வளவு அடிமை விசுவாசம் தெரிவித்து சேவகம் செய்பவர்கள் ஒரு விடயத்தினை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

மலையக மக்கள் ஊறிப்போன பிற்போக்கு தொழிற்சங்க அரசியல் தலைமைகளை நிராகரிக்கும் முடிவுக்கு ஏற்கனவே வந்து விட்டார்கள். அவர்களது முடிவு புதிய திசை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டது. பெரும் புயல் வேகத்தில் எழுச்சி பெறுவதற்கான அடையாளங்கள் ஏற்கனவே வெளிப்படத் தொடங்கியுள்ளது. எனவே அவர்களது புதிய பாதையில் வீறு நடைபோடும் பயணத்தை பதின்மூன்று தொழிற்சங்கங்கள் அல்ல நூறு தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஏமாற்றினாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதே உண்மையாகும்.

தொண்டமானும் அய்யாத்துரையும், ஓ.ஏ.இராமையாவும் ஐக்கியப் படுவதால் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. மலையக மக்கள் தமது தலை விதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் பாதையில் அரசியல் கொள்கை அடிப்படையில் ஐக்கியப்பட்டு அணிதிரள வேண்டும். அத்தகைய ஐக்கியமே இன்று மலையகத்திற்கு அவசியமாகும்.

**அட்டன் தங்கவேல்**

**உங்கள் வாக்கு.**

1ம் பக்க தொடர்ச்சி..

உணர்வு பூர்வமான வேலைத் திட்டமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த வேலை முறைக்கு ஒரு அங்கீகாரமாகவே வடமேல் மாகாணசபைத் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணிக்கு குறிப்பாக சிங்கள மக்கள் பதின்மூவாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை அளித்து தமது ஆரம்ப ஆதரவு தெரிவித்தனர். வன்முறை மோசடி திட்டமிட்ட கள்ள வாக்குகள் என்பன மத்தியிலும் மக்கள் அளித்துள்ள வாக்குகள் புதிய இடதுசாரி முன்னணி செல்லும் திசை சரியானதென்பதை நிரூபித்துள்ளது.

எனவே புதிய அரசியல் திசை மார்க்கத்தில் புதிய இடதுசாரி முன்னணிக்கு உங்கள் வாக்குகளை அளிப்பீர்களானால் இது சிறந்த ஒரு அரசியல் எதிர் காலத்தைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் குறுகிய சுயநல நோக்கங்களுக்கு உங்கள் வாக்குகளை வேண்டி நிற்போரை நிராகரித்து சரியானதும் மக்கள் விடுதலைக்கு வழி வகுக்கக் கூடியதுமான ஓர் அரசியல் பாதையைப்பலப்படுத்தி முன் னெடுக்க உங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவீர்கள் என நம்புகின்றோம்.

குறிப்பாக மலையகத்தின் கடந்த கால நிகழ்கால நிலைமைகளை கணக்கில், எடுத்து மலையக மக்களது வாழ்வின் மாற்றத்திற்காக உங்கள் வாக்குகளை பயன்படுத்த முன்வர வேண்டும். புதிய இடதுசாரி முன்னணிக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் சிறந்த ஓர் எதிர்காலத்தைக் கட்டி எழுப்பு வதற்கான அடித்தளக் கற்களாக அமைய வேண்டும் என்பதே புதிய பூமியின் வேண்டுகோளாகும்.

அதேபோன்று இருபெரும் பேரினவாதக் கட்சிகள் மீதும் வெறுப்பும் விரக்தியும் கொண்டுள்ள கொழும்பு வாழ் மக்கள் தமது வாக்குகளை புதிய இடதுசாரி முன்னணிக்கு அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். உங்களது வாக்குகள் ஒவ்வொன்றும் யுத்தத்திற்கு, தனியார் மயத்திற்கு, மக்கள் விரோத நடவடிக்கை களுக்கு எதிரான உறுதியான அங்கீகாரமாக அமைதல் வேண்டும். கடுமையான எதிர்ப்பின் அடையாளமாக அமைதல் வேண்டும், நீங்கள் அளிக்கும் வாக்குகளால் புதிய இடதுசாரி முன்னணி சக்தி மிக்க எதிர்ப்புப் போராட்ட இயக்கமாகப் பலம் பெறுவதற்கு வழி ஏற்படும்.

எனவே ஐந்து மாகாணங்களிலும் உங்களது வாக்குகளை புதிய இடதுசாரி முன்னணிக்கு வழங்க வேண்டும் என வேண்டுகின்றோம். அவ்வாறு வழங்கும் ஒவ்வொரு வாக்கும் சுயநல சந்தர்ப்பவாத அரசியலுக்கோ அன்றி ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளுக்குகோ வழங்கும் வாக்குகளாக அமையாது நிச்சயம் நேர்மையான கொள்கைகளையுடைய உத்வேகம் மிக்க புதிய இடதுசாரிகளுக்கு வழங்கும் அங்கீகார வாக்குகளாகவே அமையும் என்பது திண்ணம்.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு ஆகேயிரன் 26/1, சிவனந்த வீதி, கொழும்பு 13.